Registered as a Newspaper பக்கங்கள் 08 விலை ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 15 [01-10-1993] வெள்ளிக்கிழமை ஓசை 225

## அரச அதிபர் கையிருப்பில் போதிய அளவு உணவுப் பொருள்

யாழ். குடாநாட்டிற்கு தற்சமயம் சுமார் மூன்று மாதங்களிற்குத் தேவையான உணவுப் பொருள்கள் கையிருப்பில் உள்ளதாக யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் நமது நிருபர் கேட்ட கேள்விஒன்றிற்கு பதிலளிக்கையில் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். குடாநாட்டிற்கு சுமார் மூன்று மாதங்களிற்குத் தேவையான அரிசி, மா மற்றும் உணவுப் பொருள்கள் அடங்கலாக கையிருப்பில் உள்ளதாக தெரிவித்தார். மேலும் தற்சமயம் காங்கேசன்துறையில் தரித்து நிற்கின்ற உணவுக் கப்பல்களிலும் ஓரளவு உணவுப் பொருள்கள்இறக்கப்படாமல் இருப்பதாகவும் ஊரடங்குச் சட்டம் எடுக்கப்பட்டவுடன் மேற்படி கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (பா)

# புலிகளின் துணிகர எதிர்த் தாக்குதல், ராணுவ வட்டாரங்களில் பேரதிர்ச்சி

## விமானப்படைக்கும் அஞ்சவில்லையாம்

(கொழும்பு)

கனரக வாகனங்கள் சகிதம், விமானப் படையின் உதவியுடன் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்டு வரும் பாரிய தாக்குதல் நடவடிக்கையை எதிர்த்து விடுதலைப்புலிகள் மேற்கொண்டு வரும் துணிகர எதிர்த்தாக்குதல்கள் இராணுவ வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. இம்மோதலில் இராணுவத்திற்கு ஏற்பட்டுள்ள பாரிய உயிரிழப்பும், தளபாட இழப்பும், அவர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து பி. பி. ஸி செய்தியாளர் தெரிவிக்கையில், யாழ்தேவி எனப் பெயரிடப்பட்ட இவ் இராணுவ நடவடிக்கைக்கு விமானப்படையினர் உதவியாக செயற்பட்ட போதும் விடுதலைப்புலிகளின் [illegible] எதிர்த் தாக்குதலை சந்திக்க வேண்டியிருப்பதாக கொழும்பு இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி குறிப்பிட்டுள்ளார். அத்தோடு காலாட்படையினர் எதிர்பாராதவிதமாக எதிர்த்தாக்குதலை புலிகளிடம் இருந்து எதிர்நோக்க வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.


யாழ்தேவி இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினரின் முக்கிய நோக்கம் கிளாலியை சென்றடைவதுதான் எனக் குறிப்பிட்டுள்ள பி. பி. ஸி செய்தியாளர் இராணுவத்திற்கு உதவியாக கவசவாகனங்களும் வானூர்திகள் நிற்கின்ற போதும் விடுதலைப்புலிகள் பின்வாங்கவில்லை அவர்களின் பலத்த எதிர்ப்பை இராணுவம் சந்திக்க வேண்டியுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

டி. பி. விஜேதுங்க ஜனாதிபதியாக பதவி ஏற்றபின் எடுக்கப்படும் பெரிய இராணுவ நடவடிக்கை இதுவாகும். வடக்கு கிழக்கு பிரச்சினையை இனப் பிரச்சினை அல்ல வெறும் பயங்கரவாத பிரச்சினை என்று ஜனாதிபதி விஜேதுங்க பல தடவை கூறியுள்ளார். இவரின் இக்கருத்து சிங்களவர் மத்தியில் பலபகுதியினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. வடக்கு

[8ஆம் பக்கம் பார்க்க]

## கொலராவினால் ஒருவர் மரணம்

வாந்திபேதி (கொலரா) நோய்க்கிலக்காகி யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் நேற்று மரணமானார். அராலி வடக்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த முருகேசு நாகரட்ணம் [வயது 64] என்பவரே வாந்திபேதி நோய்க்கு பலியானவராவார் இவருடன் சேர்த்து வாந்திபேதி நோய்க்கு இதுவரை நால்வர் பலியானதாக யாழ். போதனா மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.




புலோப்பளைச் சமரில் விடுதலைப்புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட டாங்கிகளில் ஒன்று எரிந்து கொண்டிருப்பதை மேலுள்ள படத்தில் காணலாம்.

## புலோப்பளைச் சமரில் 125 படையினர் பலி

[illegible]னையிறவுக்கு வடக்கே [illegible] மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கையில் 125இற்கும் மேற்பட்ட சிறிலங்கா படையினர் பலியாகினர் எனவும் இவர்களில் ஆறு பேர் அதிகாரிகள் [illegible] வானொலி அறிவித்தது.

இந் நடவடிக்கையில் 120க்கு மேற்பட்ட இராணுவத்தினர் பலியாகியதாகவும் பல கவச வாகனங்களை சிறிலங்கா இராணுவம் இழந்ததாகவும் இந்திய வானொலி தெரிவித்தது.



டிக்கைக்கு விமானப்படையி ... உதவியாக செயற்பட்ட ... விடுதலைப்புலிகளின் ... எதிர்த் தாக்குதலை

காலாட்படையினர் எதிர்பா ராதவிதமாக எதிர்த்தாக்கு தலை புலிகளிடம் இருந்து எதிர்நோக்க வேண்டியிருப்ப

... முக்கிய நோக் கம் கிளாலியை சென்றடை வதுதான் எனக் குறிப்பிட் டுள்ள பி. பி. ஸி செய்தியா ளர் இராணுவத்திற்கு உதவி

பின்வாங்கவில்லை அவர்க ளின் பலத்த எதிர்ப்பை இரா ணுவம் சந்திக்க வேண்டியுள் ளது எனவும் தெரிவித்துள் ளார்.

டி. பி. விஜேதுங்க ஜனா திபதியாக பதவி ஏற்றபின் எடுக்கப்படும் பெரிய இரா ணுவ நடவடிக்கை இதுவா கும். வடக்கு கிழக்கு பிரச் சினையை இனப் பிரச்சினை அல்ல வெறும் பயங்கரவாத பிரச்சினை என்று ஜனாதிபதி விஜேதுங்க பல தடவை கூறி யுள்ளார். இவரின் இக்கருத்து சிங்களவர் மத்தியில் பல பகு தியினராலும் ஏற்றுக்கொள் ளப்பட்டுள்ளது. வடக்கு

[8ஆம் பக்கம் பார்க்க]

# புலோப்பளைச் சமரில் 125 படையினர் பலி

... ஆனையிறவுக்கு வடக்கே ... மேற்கொள்ளப் ... வரும் இராணுவ நட ... க்கையில் 125இற்கும் மேற் ... சிறிலங்கா படையினர் ... னர் எனவும் இவர்க ... அறு பேர் அதிகாரிகள் ... ம், வெளிநாட்டுச் ... நிறுவனங்கள் தெரிவி ... மேலும் இந் நடவடி ... போது 140க்கு மேற் பட்ட படையினர் காயமடை ... எனவும் அவை தெரி ...

... தவேளை மேற்படி ... நடவடிக்கையில் 96 ... கொல்லப்பட்ட ... ம் 175க்கு மேற் ... காயமடைந்தனர் ... வும் சிறிலங்கா பாது காப்பு வட்டாரங்களை மேற் ... கோள்காட்டி சிறிலங்கா

வானொலி அறிவித்தது.

இந் நடவடிக்கையில் 120 க்கு மேற்பட்ட இராணுவத் தினர் பலியாகியதாகவும் பல கவச வாகனங்களை சிறி லங்கா இராணுவம் இழந்த தாகவும் இந்திய வானொலி தெரிவித்தது.

## கைப்பற்றப்பட்டவை

நேற்று முன்தினம், புலோப்பளைப் பகுதி யில் இடம்பெற்ற உக்கிர மோதலின்போது ராணுவத்திடம் இருந்து விடுதலைப் புலிகளால் பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. கைப்பற் றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு;

- ஃ எல்3 ஜி. பி. எம். ஜி. — 02
- ஃ ஜி. பி. எம். ஜி — 02
- ஃ மினிமி — 01
- ஃ ஏ. கே. எல். எம். ஜி. — 03
- ஃ ஆர். பி. ஜி — 04
- ஃ 60 எம். எம். மோட்டார் — 02
- ஃ 40 எம். எம். பிஸ்டல் — 03
- ஃ ரி — 56 — 1ரக துப்பாக்கி — 11
- ஃ ரி — 56 — II ரக துப்பாக்கி — 36
- ஃ ரி — 56 (புதியது) — 08
- ஃ ரி — 81 — ரக துப்பாக்கி — 15
- ஃ ரி — 81 மகசீன் — 32
- ஃ ரி — 56 — II மகசீன் — 120
- ஃ ஏ. கே. எல். எம். ஜி. ரம் மகசீன் — 03
- ஃ ஜே. ஆர். குண்டு — 43
- ஃ எம் — 75 ரக குண்டு — 08
- ஃ ரி. என். ரி. — 04
- ஃ 203 ஷெல் — 05
- ஃ ஐ. எம். ரவைகள் —10,030
- ஃ ஏ. கே. எல். எம். ஜி. லிங்குடன் ரவை — 406
- ஃ எல்3 லிங்குடன் ரவைகள் — 1450
- ஃ 50 கலிபர் ரவைகள் — 94
- ஃ ஜி. பி. எம். ஜி. லிங்குடன் ரவைகள் — 500
- ஃ மொபைபில் செற் — 03
- ஃ பற்றி — 04
- ஃ பைனாகுளர் — 01
- ஃ 60 எம். எம். ஷெல் — 12
- ஃ ஆர். பி. ஜி. ஷெல் — 05
- ஃ ஏ. கே. கோல்சர் — 05
- ஃ ஏ. கே. எல். எம். ஜி—கோல்சர் — 33
- ஃ மழைக்கவசம் — 05
- ஃ கிற்பாக் — 02
- ஃ புளட்புறு ஜக்செட் கோல்சர் — 23
- ஃ கெல்மட் — 02
- ஃ தண்ணீர்க்கான் — 34
- ஃ போக்கஸ் லைட் — 01

## ஹமில்டன் ... மகன் பலி

(கொழும்பு)

... போது நடைபெற்று ... 'யாழ்தேவி' இராணுவ ... டிக்கையில் பாதுகாப்பு ... சின் செயலர் ஜெனரல் ... ன் வனசிங்காவின் ... ய உறவினரான கப் ... லின் ஜெயதிலக்கவும் ... ப்பட்டுள்ளதாக அறி ... டுள்ளது. இவர் ... வின் மருமகன் முறை ... என்பது குறிப்பிடத்

# 80 போராளிகள் வீரச்சாவு

புலோப்பளை - அல்லிப் பளைப் பகுதியில் முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தின ருக்கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையே நேற்று முன்தினம் இடம்பெற்ற உக்கிர நேரடி மோதலின் போது 80 போரா ளிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த இப் போராளிகளுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத் தைத் தெரிவித்துக்கொள் கின்றனர். வீரச்சாவடைந்த இப் போராளிகளின் உருவப் படங்கள் உள்ளே.

# தென்மராட்சியில் குண்டு வீச்சு ஒருவர் பலி; 9 பேர் காயம்

(...மது நிருபர்)

... மராட்சிப் பகுதியில் ... ங்கா விமானப்படை ... விமானங்கள் நடாத் ... முடித்தனமான தாக் ... ஒருவர் உடல்சிதறிப் ... ர். ஒன்பது பேர் படு ... ந்தனர்.

பிற்பகல் 2 மணி 15 வரை நடை ... மானத் தாக்குதலின் ... ஒருவர் கொல்லப் ... ன் ஒன்பது பேர் படு ... ந்தனர்.

விமானத் தாக்குதலுக்கு பலியானவர் சைக்கிளில் வந்த தாகவும் போர் விமானங் களை கண்டவுடன் தனது சைக்கிளை விட்டுவிட்டு பாது காப்பைத் தேடி ஓடியதாகவும் அப்போது அவருக்கு அருகில் விழுந்துவெடித்த குண்டொன் றுக்கு அவர் உடல் சிதறிப் பலியானதாக இறந்தவரு டைய உடலை எடுத்து வந்த ஒருவர் தெரிவித்தார். இறந்த வரது உடல் யாழ். போதனா மருத்துவமனை பிரேத அறை யில் வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இறந்தவர் பண்டி தர் குடியிருப்பைச் சேர்ந்த கண்ணன்எனதெரியவருகிறது.

இதேவேளை கைதடி நுணா வில் பகுதியிலும் சாவகச்சேரி, முகமாலை பகுதிகளில் மேற் கொண்ட விமானத் தாக்கு தலுக்கு படுகாயமடைந்தவர் களது பெயர் விபரம் வரு மாறு:-

கைதடி நுணாவில் பகுதியில் சுப்பிரமணியம் நாகம்மா

[8ஆம் பக்கம் பார்க்க]

# யுத்த முனையில் பத்தாயிரம் படையினர்

(கொழும்பு)

யாழ்ப்பாணம் ஆனையிற வுப் பகுதியில் ஆரம்பிக்கப் பட்டுள்ள 'யாழ்தேவி' ராணுவ நடவடிக்கையில் பத்தாயிரம் படையினர் பயன் படுத்தப்பட் டதாக சிறிலங்கா அரசு தரப் புச் செய்திகள் தெரிவிக்கின் றன.

இருதினங்களிலும் மேற் கொள்ளப்பட்ட படை நடவ டிக்கைகளுக்கு கனரக டாங் கிகள் கவச வாகனங்கள் பீரங் கிகள் போன்றவை பயன்படுத் தப் பட்டதாகவும் விமானப் படையினர் இடைவிடாது குண்டுத் தாக்குதலை மேற் கொண்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது.



புலோப்பளைச் சமரில் விடுதலைப்புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட டாங்கிகளில் ஒன்று எரிந்து கொண்டிருப்பதை மேலுள்ள படத்தில் காணலாம்,



புலோப்பளை சமரில் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட மற்றொரு டாங்கி குடிசைக்கு அருகில் எரிந்து கொண்டிருப்பதை படத்தில் காண லாம்.

## நோய்த் தடுப்பு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரி லியோக்கழகத்தினர் ஏற்பாடு செய்துள்ள கொலரா நோய்த் தடுப்பு தொடர்பான கருத் தரங்கு ஒன்று இன்று முற்பகல் 8. 30 மணிக்கு ஜோன் பொஸ்கோ பாடசாலையிலும் பிற்பகல் 1. 00 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல் லூரியிலும் நடைபெறும்.

## முதல் நாள் மோதலில் 2 புலிகள் வீரச்சாவு

(நமது நிருபர்)

இயக்கச்சி, கறுக்காய்ப் பகு தியில் முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடு தலைப்புலிகளுக்குமிடையில் கடந்த 28ம் திகதி இடம் பெற்ற நேரடி மோதலின் போது இரு விடுதலைப் புலி கள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த லெப்டின ன்ட் குருபரன் (குகனேசசர்மா ஸ்ரீஸ்கந்தராஜா காரைநகர் தற்போதைய முகவரி அடைக் கலம் தோட்டம் கந்தசுவாமி கோவிலடி மாவடி வட்டுக் கோட்டை) வீரவேங்கை காந் தருபன் (சேனாதிராஜா ஜெயகாந்தராஜா மயிலிட்டி யாழ்ப்பாணம் தற்போதைய

(8ஆம் பக்கம் பார்க்க)



லெப். குருபரன்



வீரவேங்கை காந்தருபன்

## வரி விளம்பரம்

### ஆண்டு 4 - பரீட்சை

1994 புலமைப் பரிசில் மாணவருக்கு ஒவ்வொரு சனிக்கிழமையும் நடாத்தப்படும் தொடர் பரீட்சையின் 11 வது பரீட்சை 02 - 10 - 1993 சனி பி. ப. 3 மணிக்கு நடைபெறும். வினாத்தாள் பெற்றுக் கொள்ளலாம். எடிசன் அக்கடமி யாழ் இந்துக்கல்லூரி அருகில், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (6145)

### இலக்கியக் களத்தில் ''சுவடுகள்''

1991 ஆம் 1992 ஆம் ஆண்டுகளில் வெளிவந்த நாவல்களில் பரபரப்பாகப்பேசப்பட்ட நாவல் இயல்வாணன் எழுதிய ''சுவடுகள்''. இந்த நாவலில்.... மௌனங்களைப் பிளந்து ஒருவார்த்தை வெடிக்கிறது. இருளைக் கிழித்து ஒரு விடியல் பிறக்கிறது... சூரியனைத் தேடி ஒரு சுதந்திரப்பூ மலர்கிறது... (6144)

### விற்பனைக்குண்டு

சில்க்கி இன சேவல் + பேடு சீமை முயல்கள் (2மாதம்)விற்பனைக்குண்டு. தொடர்பு த. செல்வக்குமார். சந்திரசேகரா பிள்ளையார் கோவிலடி நல்லூர் வடக்கு. (சி. 7524)

### நுளம்புத் தொல்லையா

இரவில் நீம்தூபம் புகைக்கின்றோம். நிம்மதியாக நித்திரை கொள்கிறோம். எமக்கில்லை, நுளம்புத்தொல்லை. பாவியுங்கள்? நீம்தூபம்'' பக்கற் ஒன்று ரூபா. 3!. 25 பக்கற் கொண்ட அட்டை ரூபா. 60 - மடுட்மே அண்ணாகோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. மில்க்வைற்'' (சி. 7511)

### போத்தல் தேவை

ஹோர்லிக்ஸ்வீவாபோத்தல்கள் மூடியுடன். ஜாம், சோஸ். பியா மற்றும் கோடியல் போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படும். விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி. ரேஸ்லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட் 14 சீனியர் ஒழுங்கை யாழ்ப்பாணம். (சி. 7400)

### வினாவிடைப் போட்டி

சர்வதேசவெள்ளைப்பிரம்பு தினத்தை முன்னிட்டு யாழ். விழிப் புலனற்றோர் சங்கம் வினாவிடைப்போட்டி ஒன்றை நடாத்துகின்றது. வெற்றி பெறும் அதிர்ஷ்டசாலிகளுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும். படிவங்கள் கிடைக்கும் இடங்கள். பூபாலசிங்கம்


# எல்ரோர் கொலரா

## தேநீர்க் கடைச் சுகாதாரம்

இந்நோய் தொடர்புடைய மற்றொரு அதிசயமான சம்பவம் தேநீர்க் கடைகளிலும், உணவகங்களிலும், ஐஸ்கிறீம் கடைகளிலும் சுகாதாரம் பேணப்படவில்லை. என்ற சேதிகள் சுகாதார வட்டாரங்களில் அடிபட்டன ஒரு சில குறிப்பிட்ட கடைகளில் மட்டுமே சுகாதாரம் பேணப்படவில்லை என்று சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் (M. O. H) எச்சரிக்கை செய்தது ஜனங்களை இந்த நோய் அணுகாதிருக்க, ஒரு கனவு போல் மறந்து போன சுகாதார விதிகளுக்கு உயிரும் ஊட்டமும் அளிக்கப்பட்டன. சுகாதார பரிசோதகர்கள் அசுத்தமான தேநீர்க் கடைகளை நடத்தியவர்களுக்கும், ஐஸ்கிறீம் கடையை நடத்தியவர்க்கும் 'இப்படியிருந்தால் நாங்கள் கடையை மூடவேண்டியதுதான்' என்று எச்சரித்தார்கள் யாழ் ஸ்டேஷன் சந்தியிலிருந்து சத்திரச் சந்திவரை மூன்று கடைகளை மூட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எச்சரிக்கையையும் மீறி கடையைநடத்த எத்தனித்தவரின் கடையை மூடிய செயல், கோயில் காளையாகத் திரிபவர்களுக்கு கொம்பு சீவப்படும் என்று எச்சரிக்கை செய்வதாக உள்ளது.

யாழ் நகரிலுள்ள பல கடைகளின் சுகாதார நிலைமை மூடி மறைக்கப்படுவதாகவும் வஷயமறிந்தவர்கள் பேசிக்கொள்கிறார்கள். 'உணவு விடுதி நோய்க் குறிகள்' பற்றி சுகாதார உத்தியோகத்தர்கள் கண்டுகொள்ளாதிருப்பது கவலைக்குரியது பாதுகாப்பான, புத்திசாலித்தனமான நடவடிக்கைக்காகப் பாடுபடும் சுகாதார வைத்திய பரிசோதகர்கள் இன்னும் அசலக் கால் வைக்கவேண்டும் என்றுமக்கள் பசிக் கொள்கிறார்கள். ே

வெள்ளை அடித்த சுவர்களும், உணவு வகைகளை மூடி வைப்பதுவும் மாத்திரம் சுகாதாரத்தைப் பேணும் நடவடிக்கையாகாது என்று சமுதாய மருத்துவத்தில் அக்கறையுள்ளவர்கள் மிகநிச்சயமாகச் சொல்கிறார்கள். சில கடைகளில் மலசல கூடத்துக்குப் பக்கத்தில் கிணறு இருக்கும் விஷயமும் அம்பலமாகியுள்ளது. இப்போது இல்லை; எப்போதும் கூட இப்படித்தான் அமைந்திருக்கிறது. இக்கடைகளுக்கு அனுமதி வழங்கியதில் 'உள்ளூராட்சி அரசியல் தன்மை' இருந்திருக்கலாம் என்கிறார் ஒரு சமுதாய வைத்திய நிபுணர். இந்தக் கடைகளை இழுத்து மூடி மீளவும் திறப்பதால் என்ன பயன்? கிணறு இருந்த இடத்தில் தானே இருக்கப் போகிறது! மேலும் ஐஸ்கிறீம் கடைகளில் நிலத்துக்குப் பளிங்குக் கல்லும் கூரைக்கு வர்ணமும் பூசப்பட்டிருக்கிறது என்று பேசிக் கொள்வது ஆபத்தை விலைக்கு வாங்கியதாக முடியும் முழு இலங்கையிலும், யாழ் மாவட்டத்திலும், திருக்கோணமலையிலும்தான் ரைபயிட் ஜுரத்தினால் பாதிக்கப்படுபவர்கள் அதிகம் என்பது இங்கு குறிப்பிடுவது உகந்தது.

அடுத்து உணவகங்களிலும், தேநீர்க்கடைகளிலும் உணவு கையாள்பவர்களின் சுகாதாரம் பேணப்படாமலும் இருக்கலாம். உணவுக் கடையில் ஒருவர் உணவு பரிமாறிக் கொண்டிருக்கலாம். சைவக் கடையில் மற்றொருவர் பொட்டலம் கட்டிக் கொண்டிருக்கலாம். இன்னொருவர் திருகை பிடித்து உழுந்து அரைக்கலாம். இவர்களும் நோய்காவிகளாக இருக்கலாம். வயிற்றுப் பிழைப்புக்காக இராப்பகலாக உழைக்கும் இந்தத் தொழிலாளர்களின் சுகாதாரத்துக்கு யார் உத்தரவாதம்?

## உணவு கையான்பவர்கள் சுகாதாரம்

வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தி நோய் அற்றவர்கள் என்று பொறுப்பு வாய்ந்த வைத்தியர்களால் உறுதிப்படுத்தப்படாமல் கடைகளில் உணவு பரிமாறுபவர்களை வேலைக்கமர்த்துவது பெரும் ஆபத்தை விளைவித்து விடும் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தத் துறையில் நின்று மக்களுக்குச் சேவையாற்றும் நோக்கத்துடன் டாக்டர்களான என். சிவராசா, சி. சிவஞானசுந்தரம் (நந்தி), செ. சு. நச்சினார்க்கினியன் ஆகியோர், தங்கள் சுற்றாடலில் ஒரு செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த உள்ளனர். கொக்குவில். கோண்டாவில் பகுதிகளிலுள்ள உணவகங்களில் உள்ளவர்களின் உடல்நிலையைப் பரிசோதித்து, அவர்களது தேக ஆரோக்கியத்தை உறுதிப்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. இது பாவனையாளர்களுக்கு நன்மை பயக்கக் கூடியதோடு, உணவு பரிமாறுபவர்களின் உடல்நிலையை பாதுகாப்பதற்கும் உதவும். இத்தகைய ஒரு திட்டத்தை யாழ். மாநகர சபை எல்லைக்குப் புறத்தே உள்ள இடங்களில் நடைமுறைப்படுத்தப் போவதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சுந்தரம் டிவகலாலா தெரிவிக்கிறார். அத்துடன் உணவு கையாள்பவர்களுக்கு மூன்று நாள் சுகாதாரக் கருத்தரங்கும் வடமராட்சியிலும், தென்மராட்சியிலும் இடம்பெற உள்ளதாகவும் அவர் கூறுகிறார்.

## இடம்பெயர்ந்தோர் முகாம்

குழந்தைகளையும், வயோதிபர்களையும், போஷாக்குக் குறைந்தவர்களையும் கொலரா நோய் இலகுவில் தாக்கும் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது இன்றைய நிலையில் புத்தூர், மானிப்பாய். வாதரவத்தை கிராமங்களில் உள்ள சிறார்களுக்கு விற்றமின் குறைபாடுகள் இருப்பது இனங்காணப்பட்டுள்ளது. 11விகிதமான சிறுவர்கள் விற்றமின் ஏ குறைபாட்டினால் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். மேலும் போஷாக்குக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களின் பெற்றோர்களில் 25 விகிதமானோர் படிப்பறிவற்றவர்கள். இடம்பெயர்ந்தோர் முகாம்களில் நோய்த் தடுப்பு தடை நடவடிக்கைகளோடு போஷாக்குக் குறைபாட்டைப் போக்கிடும் மேலதிக நடவடிக்களை எடுக்கா விட்டால் கொலரா நோய் முகாம்களைத் தாக்கக் கூடும் என்று வைத்தியர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். கொலரா தடுப்பு ஊசி முப்பது விகிதம்தான் பயன் தரும் என்பதால் முகாம்களில் உள்ளவர்களுக்கு அந்த ஊசி போட்டும் பயனில்லை. ஊசியும் இப்போது பாவனையில் இல்லை. மனிதாபிமானமுள்ள அமைப்புகளும், மற்றவர்களும் இடம்பெயர்ந்தோர் முகாம்களின் போஷாக்குக் குறைபாட்டைப் போக்கமேலதிக நடவடிக்கைகள் எடுக்கத் தாமதிப்பது சோகமானது.

கற்பனையாகச் சொல்லவில்லை. யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள உணவு மற்றும் மருந்துக் கட்டுப்பாட்டுப் பிரிவில்தான் தகுதி வாய்ந்த அதிகாரிகள் இருப்பதாகவும், கொலரா விவகாரத்தில் தலையிடாமல் அவர்கள் தணிந்து போவதாகவும் வெளியில் பேசிக்கொள்ளப்படுகிறது. இது பூக்கடை- எது சாக்கடை என்று தெரியாமல் சிலர் தடுமாறுவதால், ஏன் வில்லங்கத்தை 'விலை பேசி' வாங்கவேண்டும் என்று இவர்கள் தலைமறைவாகியிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. எது எப்படியாயினும் நாம் பார்க்க வேண்டாம் என்றால் கண்களை மூடிக் கொள்ளலாம். ஆனால் கதைகளைக் கேட்க வேண்டாமென்று காதைமூடிக்கொள்ள முடியவில்லையே அதனால் கேட்டதை எழுதுகிறேன்.


# அறிவுக் களஞ்சியம்

16ஆவது இதழ் வெளிவந்து விட்டது!

தமிழீழத்தின் மிகச் சிறந்த அறிவியல் ஏடு.

ரூ. 12/-

(6143)

# இலவச கட்டுமரம் விற்பனைக்குண்டு

6 முழம், 7 முழம் நீளம் கொண்ட கட்டுமரங்கள் எம்மிடம் விற்பனைக்குண்டு. கட்டுமரங்கள் பெற விரும்புவோர் நேரில் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

1. கடல்வள அபிவிருத்திப் பகுதி,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
[illegible]வடி.

2. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
கடற்புலிக
தவிண்டி[illegible].

(சி-7523)


## நினைவு கூருகின்றோம்...
## 1993-10-01

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் திருமலையில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 02 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு யாழ். ஆனைக்கோட்டைப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**வாசு** [சி. வாசுதேவன் - வல்வெட்டித்துறை]

யாழ் - காங்கேசன்துறை, மயிலிட்டிப் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப் பற்றாளரான -

**சோதி** [வைத்திலிங்கம் பரமநாதன் - வீரமாணிக்க தேவன்துறை - மயிலிட்டி[

1989ஆம் ஆண்டு முல்லைத்தீவு - பழம்பாசிப் பகுதியில் இந்தியப் படையினரின் மிதிவெடியில் சிக்கியதில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**மேஜர் குமுதன்** [சரவணமுத்து தளையசிங்கம் - 1-ம் யூனிற். ஓமந்தை - வவுனியா]

இதேதினம் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1990ஆம் ஆண்டு மட்டு. 10-ம் கட்டைப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட உழவு இயந்திர விபத்தில் எமைப் பிரிந்த -

**பாலட்** [சுப்பிரமணியம் செல்வராஜ் - கன்னங்குடா - மட்டு]

அம்பாறை - திருக்கோயில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டு முகாமை அண்டிய கடலோரத்தில் சடலமாக மீட்கப்பட்ட தமிழிளைஞன்.


மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட தளவாயைச் சேர்ந்த தமிழிளைஞன். முஸ்லிம் காடையர்களினால் கொலையுண்ட நாவற்குடாவைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.


செப்ரெம்பர் [illegible] உலகை வலம்

வந்துவிட்டீர்களா?

விற்பனையாகின்றது

வாங்கிப்படியுங்கள்!!



தார வைத்திய பரிசோதகர் கள் இன்னும் அசலக் கால் வைக்கவேண்டும் என்றுமக்கள் பசிக் கொள்கிறார்கள். ே

காக இராப் ..கலாக உழைக் கும் இந்தத் தொழிலாளர் களின் சுகாதாரத்துக்கு யார் உத்தரவாதம்?

விக்கப்படுகிறது இன்றைய நிலையில் புத்தூர், மானிப் பாய். வாதரவத்தை கிராமங் களில் உள்ள சிறார்களுக்கு

மென்று காதைமூடிக்கொள்ள முடியவில்லையே அதனால் கேட்டதை எழுதுகிறேன்.

### போத்தல் தேவை

ஹோர்லிக்ஸ்வீவாபோத்தல்கள் மூடியுடன். ஜாம், சோஸ். பியா மற்றும் கோடியல் போத்தல் கள் எம்மால் கொள்வனவு செய்யப்படும். விற்க விரும்பு வோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி. ரேஸ்லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட் 14 சீனியர் ஒழுங்கை யாழ்ப் பாணம். (சி.7400)

### வினாவிடை ப் போட்டி

சர்வதேசவெள்ளைப்பிரம்பு தினத்தை முன்னிட்டு யாழ். விழிப் புலனற்றோர் சங்கம் வினாவிடைப்போட்டி ஒன்றை நடாத்துகின்றது. வெற்றி பெறும் அதிர்ஷ்டசாலிகளுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும். படிவங்கள் கிடைக் கும் இடங்கள். பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். குலசி றேட்ஸ் கல்வியங்காடு. முடிவு திகதி 10.10.93(6113)

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

### MASTER OF SCIENCE IN BIOTECHNOLOGY

Applications will be entertained by me upto 1993.10.11 from suitable qualified persons who wish to register for the Degree of Master of Science in Biotechnology.

Graduates (and those awaiting results) in Chemical, Biological, Medical, Dental, Veterinary, Agricultural and Engineering Sciences will be considered. Forward applications with biodata. All applicants will be required to sit for a qualifying examination and a viva. Address correspondence to Registrar, University of Jaffna.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA.
1993.09.29

சி/7520


## உலக உலா

### செப்ரெம்பர் மாத இதழ் உலகை வலம்

வந்துவிட்டதா?

விற்பனையாகின்றது

வாங்கிப்படியுங்கள்!!



உலகைவலம் வந்தஉணர்வினைப்பெறுவீர்கள்!!!

- நியூஸ் வீக், ஏசியா வீக், ரைம் போன்ற அனைத்துலக ஆங்கிலப சஞ்சிகைகளின் அரிய கட்டுரைகள்.
- உலக சமூக அரசியல் செய்திகள்.
- தமிழீழ ஏடுகள் எவற்றிலுமே வெளிவராத அரிதான விடயங்கள்.

அறிவினை வளர்க்கும்
அருமையான செய்திகளை அழகு தமிழிலே
மாதாந்தம் தருவது

# உலக உலா

- செய்திச் சரங்கள்
- கண்டங்களிலே வெடிக்கும் விடுதலை எரிமலைகள்
- அடக்கத் துடிக்கும் அரசுகளின் ஆதிக்கக் கொடுமைகள்
- வாணிக, மருத்துவச் சாதனைகள்.
- விஞ்ஞான விந்தைகள்.
- தொழில் நுட்ப வியப்புக்கள்.

இன்னும் பல!! இன்னும் பல!!
பொது அறிவுக் களஞ்சியமாக பைந்தமிழிலே மலர்கிறது

# உலக உலா

★ யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துப் புத்தகக் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்

(6148)

தேவன்துறை - மயிலிட்டி]

1989ஆம் ஆண்டு முல்லைத்தீவு - பழம்பாசிப் பகுதியில் இந்தியப் படையினரின் மிதிவெடியில் சிக்கியதில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**மேஜர் குமுதன்** [சரவணமுத்து தளையசிங்கம் - 1-ம் யூனிற். ஓமந்தை - வவுனியா]

இதேதினம் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப் பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1990ஆம் ஆண்டு மட்டு. 10-ம் கட்டைப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட உழவு இயந்திர விபத்தில் எமைப் பிரிந்த -

**பாலட்** [சுப்பிரமணியம் செல்வராஜ் - கன்னங்குடா - மட்டு]

அம்பாறை - திருக்கோயில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டு முகாமை அண்டிய கடலோரத்தில் சடலமாக மீட்கப்பட்ட தமிழிளைஞன்.

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட தளவாயைச் சேர்ந்த தமிழிளைஞன். முஸ்லிம் காடையர்களினால் கொலையுண்ட நாவற்குடாவைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1992ஆம் ஆண்டு கட்டைக்காட்டில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவத்தினரின் மினிமுகாம் காவலரண்கள் தகர்ப்பின்போது வீரச்சாவெய்திய -

**2 ம் லெப். பதுமன்** [முத்துத்தம்பி குகதாஸ் - நிலாவெளி - திருமலை]

**தமிழ்மணி** [சொக்கலிங்கம் ரவீந்திரன் - கிளிவெட்டி மூதூர் - திருமலை]

**2 ம் லெப். அருந்ததி** [சுமதி செல்லத்துரை - விசுவமடு- முல்லைத்தீவு]

**லெப். தாமரைக்கண்ணன்** [மகேஸ்வரன் கனிசியஸ் - ஆஸ்பத்திரி வீதி - யாழ்]

**2-ம் லெப். சூரியகலா** [சித்திரா ஆனந்தராசா - வட்டுக் கோட்டை மேற்கு - யாழ்]

**2 ம் லெப். மங்கை/தர்சா** [பாமினி சிவநாதன் - சித்திரமேழி, இளவாலை - யாழ்]

**2-ம் லெப். மோகன்** [செல்வராசா ஜதீஸ்வரன் -படித்த மகளிர் குடியேற்றத்திட்டம் - மிருசுவில்]

**2-ம் லெப். மறைச்செல்வன்/விசைசன்** [சண்முகம் திருச்செல்வம் - நீர்வேலி - யாழ்]

**இளமாறன்** [சிறில் ஜெகன் - புதிய கடற்கரை, குருநகர் - யாழ்]

**ராஜவதனன்** [அந்தோனிப்பிள்ளை ஜஸ்டின் - பாசையூர் - யாழ்]

**நக்கீரன்** [சவரிமுத்து துரை - நாவாந்துறை - யாழ்]

**உலகநம்பி** [அடைக்கலம் விமலன் - லோட்டஸ் வீதி, மானிப்பாய் - யாழ்]

**செல்லப்பன்** [சுப்பிரமணியம் லோகேஸ்வரன் - 4 ம் வட்டாரம் - புங்குடுதீவு]

**இளந்திருமாறன்** [கந்தையா கிருபானந்தராஜா - ஊரெழு மேற்கு, சுன்னாகம் - யாழ்]

மன்னார் - அடம்பனில் 30 09 1992 அன்று ஏற்பட்ட சமரில் விழுப்புண் அடைந்து யாழ். மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வரும்போது வீரச்சாவெய்திய -

**2 ம் லெப். சுகந்தன்** [செல்லத்தம்பி ஞானேந்திரன் - உப்புக்குளம் - மன்னார்]

மன்னார் - முருங்கனில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட ரொக்கட் மோட்டார் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**கப்டன் காசி** [சூசை ஸ்ரானிலஸ் - குமானையன்குளம், அடம்பன் - மன்னார்]

இயக்கச்சியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**குயிலன்** [ஜெயராசா ஜெயரேவன் - குரும்பசிட்டி, தெல்லிப்பழை - யாழ்]

ஆகியோரை இந்நாளில்
நினைவுகூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-7522]

நல்லூர் இளை நாலகம்
மாநகரசபை மன்றம்
யாழ்ப்பாணம்

## நிலா தமிழின்தாசனின்
# 'நாளை': ஓர் அறிமுகம்

இலக்கியம் என்பது மனித வாழ்வை வளம்படுத்துவதற்கு மட்டுமல்ல, அது மனித வாழ்வோடு இரண்டறக் கலந்தும் இருக்க வேண்டும் என்பதை நோக்கமாக வரித்துக் கொண்டிருக்கும் கவிஞர்களில் நிலா தமிழின்தாசன் குறிப்பிடக் கூடிய ஒருவர் என்பது பலராலும் அறியப்பட்ட ஒன்றே. அவர் இன்றைய எமது தாயகத்தின் வாழ்வோடு இரண்டறக் கலந்து நிற்பவைகளாக அண்மையில் எழுதிய கவிதைகளின் தொகுப்பாக 'நாளை' வெளிவந்துள்ளது.

விடுதலை என்னும்விதையை ஊன்றுவதே தனது கவிதைப் படைப்புகளின் நோக்கம் என்றும் பறைசாற்றும் கவிஞர், அதற்காக படுகொலை செய்யப்பட நேரிட்டாலும் பரவாயில்லை என்று முரசறைந்து எழுதியுள்ள கவிதைகள் யாவும் அவரது சத்திய வேட்கைக்கும், தர்மாவேசத்திற்கும் சாட்சி சொல்லக் கூடியவை ஆகும். அத்தகையவற்றில் 'பாடித் தீர்ப்பேன்' என்பது முதல் ''வான் முகிலே ஏன் அழுதாய்'' என்பது வரையிலான முப்பத்தொன்பது கவிதைகளின் தொகுப்பாக 'நாளை' இப்போது வாசகர் கரங்களுக்கு கிட்டும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஆங்கிலேய ஆதிக்கத்திடமிருந்து விடுபடத் துடித்த இந்தியா, சுதந்திரப் போராட்ட காலத்தில் சுப்பிரமணிய பாரதி, தாகூர் போன்ற கவிஞர்களைப் பிரசவித்தது. திராவிடர் இயக்கத்தின் எழுச்சியின் மூலம் பாரதிதாசன் பிறப்பெடுத்தார். இவை போல வீறு கொண்டெழுந்து நிற்கும் தமிழீழ விடுதலைப் போராட்டம். ஆற்றல் மிக்க பல்வேறு கவிஞர்களைப் பிரசவித்திருக்கிறது, இவர்கள் காட்டிடையிலான முகாம்கள் பற்றி கற்பனையில் கண்டவர்களாக இல்லாமல் அத்தகையவற்றில் வாழ்ந்து. போராட்ட வாழ்க்கைக்கு பழக்கப்பட்டவர்களாகவும்-போராட்டத்தோடு இரண்டறக் கலந்தவர்களாகவும் இருப்பது இவர்களது படைப்புக்களின் உயிரோட்டத்திற்கு துணை செய்வதாகும். இத்தகைய கவிஞர்களின் வரிசையில் நிலாதமிழின்தாசனுக்கும் குறிப்பிடக்கூடிய இடமுண்டு என்பதற்கு 'நாளை' கட்டியும் கூறுகின்றது.

ழ்ந்து ஒளிரும் எனத்தொடங்கி விடியலை நாடும் இன்றைய தமிழீழம் எப்படி இருக்கின்றது என்பதை விபரிக்கும் ஒவ்வொரு வரியிலும் நிகழ்கால நிதர்சனங்கள் பளிச்சிடுகின்றன. அதிலும்

''புலிகள் அதிரடிகொடுத்து
நித்தமும்
புலையர் தலை அறுக்கும்-
தமிழர்
வலிமை தற்கொடை
வானை இடித்திடும்
வாழ்வு விடிவு பெறும்''

என்று அழுத்தி உரைக்கும் போது நம்பிக்கை அழுத்தம் பெறுகிறது. தைப்பாவையின் வரவு கூறுகையிலும், சித்திரைப் புத்தாண்டின் மலர்ச்சி பாடப்படுகையிலும் ''நாடழிவுறக் கோல் பிடிப்பவர் தம்மைத் துரத்தி விடுவான் அதிர்ந்திட தேன் தமிழொலி நீ எழுப்பி விடு'' என்று கூறித் தாயகத்தின் மீதான நேசத்தையும், மொழியின் மீதான பாசத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றார்.

மாவீரர் புகழ்பாடும் பன்னிரண்டு கவிதைகளும் இத்தொகுப்பின் மணியாரங்கள் ஆகும். பல்வேறு கவியரங்குகளின் போதும் பாடப்பட்ட இக்கவிதைகள் மண்ணுக்காய் மரணித்த மாவீர வேங்கைகளின் எண்ணத்தில் நனைவதோடு மட்டும் நிற்காமல் ஈழத் தமிழர்கள் இணைந்து ஒன்றுபட்டு அந்த மாவீரர் பாதையில் பாதம் பதித்திடுவோம் என்று அறைகூவுதாகவும் இருப்பது மிகவும் பாராட்டக் கூடியதாகும்.

அடிமையென அகதியென அகிலந்தோறும் அல்லலுறும் நிலை ஒழிந்து உரிமைபெற்று-குடியரசாக மக்கள் எல்லாம் குலவி வாழ - விடுதலையாம் சுகந்தத்தின் இன்பம் துய்க்க தமிழினமே வேங்கையாவாய் என்று கவிஞர் அழைப்பு விடுவது இன்றைய சந்ததியின் செவிகளில் உறைக்கும். அதனால் அனைவரும் அணி திரண்டு பரணி பாடும் நிலை உருவாகும். இது தலைவர் பிரபாகரன் காலத்தில் தமிழீழம் விடுதலை பெற்றது என்று வரலாறு பதிக்கப்படுவதற்கு இட்டுச் செல்லும் என்பது உறுதி.

செயலுக்கு உந்தும் இப்படைப்பு போல இன்னும் பல

# 'மேற்குலகின் ருஷ்யப் பொம்மலாட்டம்'

இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக ருஷ்யாவில் நடைபெற்று வந்த இழுபறி நாடகத்தின் உச்சக்கட்டம் இப்போது அரங்கேறி விட்டது. சனநாயகத்தின் காவலனாக-சந்தைப் பொருளாதார முறைமையின் மேற்குலகால் போற்றப்படும் பொறிஸ் யெல்ட்சினுக்கும் பிற்போக்காளர் -பழமையாளர் என அதே மேற்குலகினால் பட்டம் சூட்டப்பட்ட மிஞ்சியிருக்கும் பொதுஉடமைவாதிகள் ருஷ்யத் தேசிய வாதிகள் பிடியிலிருக்கும் நாடாளுமன்றம் எனப்படும் மக்கள் பிரதிநிதிகள் பேரவைக்குமான மோதல் இப்போதுமுற்றிவெடித்துவிட்டது. முன்னர் ருஷ்யப் பொதுவுடமைக் கட்சியின் காலத்தில் 1990-ம் ஆண்டளவில் தெரிவான இப்பேரவையை கலைக்குமாறு மேற்குலகம் கொடுத்த அழுத்தத்தை யெல்ட்சின் செயலில் இப்போது காட்டிவிட்டார் நாடாளுமன்றத்தைஇப்போது கலைத்துவிட்டார். அதன் மூலம் அவருக்கு பெருத்த எதிர்ப்பைக் காட்டிவந்த சபாநாயகர் ருஸ்லான் குஷ்புலட்டோவை ஓரம் கட்டிவிட முடியும் என்று யெல்ட்சின் நம்புகிறார். இதற்கு முன்னர் தான் ருஷ்ய உப சனாதிபதியாகவிருந்து மோசமான கண்டனங்களை முன்வைத்த அலெக்சாண்டர் ருட்ஸ்கோவையும் பதவி நீக்கம் செய்தார். இவ்வாறாக தனது நடவடிக்கைகளுக்கு தடையாகவுள்ள முட்டுக்கட்டைகளை நீக்க யெல்ட்சின் முழுமூச்சாக முயலப் போகின்றார் என்பதே தெளிவான செய்தியாகவுள்ளது. தனது பாதுகாப்பு அமைச்சராக ஜெனரல் பாவெல் கிரச்சேவை நியமித்திருப்பதன் மூலம் இராணுவத்தை தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க யெல்ட்சின் முயல்வதும் தெளிவாகின்றது. எனவே, இன்று, யெல்ட்சின் ''ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரோ'' எனஆடத் தொடங்கிவிட்டார்.

ஆனால் எதிர்பார்த்தது போலவே இவ் உத்தரவுகளைப் புறம் தள்ளிய நாடாளுமன்றம் யெல்ட்சினை பதவி நீக்கம் செய்வதாக அறிவித்து புதிய சனாதிபதியாக ருட்ஸ்கோவை நியமித்து, புதிய பாதுகாப்பு அமைச்சரையும் நியமித்துள்ளது. அது மட்டுமன்றிநாடாளுமன்றத்திற்குள் பிரதிநிதிகள் இரவு பகலாக இருந்தும் வருகின்றனர்.

எனவே இப்போது தனது இறுதி முடிவை யெல்ட்சின் எடுக்க வேண்டும். நடாளுமன்றிலிருந்து தனது எதிர்ப்பாளர்களை அகற்றி நாடாளுமன்றத்தைதனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர வேண்டும் ஆயுதங்களைஒப்படைத்து நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறுமாறு அவர் உத்தரவு பிறப்பித்துள்ளார். நாடாளுமன்றத்தைச் சுற்றி பாதுகாப்பை பலப்படுத்துகின்றார். அடுத்து அவர் செய்யப் போவது இனி விரைவில் தெரிந்து விடும்.

ஆனால் இங்குள்ள அதிசயம் என்னவென்றால் இவ்வளவு குழப்பங்களும் நிலவும் அதே சமயம் ருஷ்ய மக்களோ எவ்வித பரபரப்போ, ஆர்வமோ காட்டாமல் அமைதியாக இருக்கின்றமை தான். இது அவர்கள் மனநிலையின் சோர்வினைக் காட்டுவதாகவே தென்படுகிறது. எத்தனையோ புரட்சிகர போராட்டங்களில் ஈடுபட்ட இம்மக்கள் இன்று தமது நிலை குறி

**பாலகுமாரன்**

த்து என்ன செய்வது என்பது புரியாமல் தவிக்கின்றனர். அவர்களின் வாழ்க்கைத் தரமோ நாளுக்கு நாள் மோசமாகின்றது. முப்பது வீதத்திற்கு மேலான பணவீக்கம் அவர்களை வாட்டுகின்றது. எதிர்காலம் என்னவாகும் என்பதே தெரியாத நிலையில் வறுமை காரணமாக கைவிடப்பட்ட முதியோர் உணவிற்காக இரத்தல், அழுக்கடைந்த தெருக்கள், அதிகரிக்கும் களவுகள் என நிலை இழிவடைகின்றது. மேல் மட்டங்களில் ஊழல் தலை விரித்தாடுகின்றது. மேற்கு நாடுகளில் உள்ள 'மாபியா' போன்ற குண்டர் குழுக்கள் மொஸ்கோவில் அட்டகாசம் புரிகின்றனர். காவல் துறை இயலாமை நிலையை அடைந்து விட்டது. இரகசிய வன்முறை உலகம் ருஷ்யாவிலும் உருவாகிவிட்டது. எனவே எப்படிப் பார்த்தாலும் ஒரு தெளிவான அரசியல் நிலைப்பாடு இன்று ருஷ்யாவின் அவசியமாகிவிட்டது. எனவே அடுத்து யெல்ட்சின் என்ன செய்யப் போகிறார்? ருஷ்ய இராணுவம் என்ன முடிவினை எடுக்கப் போகின்றது? ருஷ்யாவின் ஏனைய குடியரசுகள் சுயாட்சிப் பகுதி

லர்களாக 40 இலட்சம் போர் வீரர்களைக் கொண்டு ஆயிரக்கணக்கான விமானங்கள் உலகின் மிகப் பாரிய நீர்மூழ்கிப்படை அணி என்பவற்றை உள்ளடக்கி, மேற்குலகை அச்சத்திற்குள் தள்ளிய செஞ்சேனையின் தற்போதைய நிலைப்பாடு என்னவென்பது மிக முக்கியமானதாகின்றது. ஏனென்றால் போட்டி சனாதிபதியாகவுள்ள ருட்ஸ்கோவ் முன்னர் ருஷ்ய இராணுவ அபிமானத்தைப் பெற்றிருந்தவராவார். ஆப்கான் போரின் போது அவரது விமானம் சுடப்பட்டு போர்க்கைதியாக சிலகாலம் பாகிஸ்தானில் இருந்தவர். அவரது துணிச்சலானபோக்கு ருஷ்ய இராணுவத்தை கவரும் தன்மை உடையதாகஉள்ளது ஏனென்றால் இன்றைய ருஷ்ய நிலை குறித்து ருஷ்ய இராணுவத்திற்குள்ளேயே பெருத்த அதிருப்தி உருவாகியுள்ளது அண்மையில் உயர் இராணுவ அதிகாரி ஒருவர் ''அவர்கள்(அரசியல்வாதிகள்) தாய்நாட்டின் நலனைப் பாதுகாக்கிறோம் என்கிற போர்வையில், தத்தம் சுயநலன்களையே பாதுகாக்கின்றனர்'' எனக் கண்டித்துள்ளார். அதே சமயம் யெல்ட்சினோ இராணுவத்தைக் கவரும் வகையில் வேதன அதிகரிப்புகளை செய்தும், அண்மையில் தனது பாதுகாப்பு அமைச்சராக தளபதி ஜெனரல் பாவெல் கிறச்சேவை நியமிக்கவும், அவரும் தனது ஆதரவை யெல்ட்சினுக்கு இப்போது தெரிவித்துள்ளார். அத்தோடு தனது பாதுகாப்பிற்கு மிக நம்பிக்கையான மொஸ்கோவை அண்மித்த பகுதிகளைச் சேர்ந்த படையணிகளையே யெல்ட்சின் பயன்படுத்தி வருகிறார். ஆனால் இவையெல்லாம் மேலோட்டமான தகவல்களே. உள்ளே ருஷ்ய இராணுவம் சிதறி சிதைந்து பழைய பெருமைகளை இழந்து விட்டதாகவே கருதப்படுகின்றது.

இன்றைய செஞ்சேனையின் நிலை நம்ப முடியத அளவுக்கு தரம் குன்றிவிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பல்வேறு முன்னாள் சோவியத்குடியரசுகளில் நிலை கொண்டுள்ள இராணுவப் பிரிவுகளுக்கும், மொஸ்கோவிலும் உள்ள தொடர்புகள்

பாடங்களை விற்கத் தொடங்கிவிட்டனர். திடுக்கிடவைக்கும் அளவிற்கு முறைகேடுகள், ஊழல்கள் இன்று இராணுவத்தில் தலை விரித்தாடுவதாக ருஷ்யாவில் தகவல்கள் வெளியாகின. அண்மையில் மூன்று விமானப் படை அதிகாரிகள் தங்கம்-பிளாட்டினம் போன்ற விலை உயர்ந்த உலோகங்களை ஏவுகணைகளில் பொருத்தப்பட்டிருந்த உதிரிப்பாகங்களில் இருந்து திருடி விற்ற போது கைதாகினர். சைபீரியாவிலுள்ள விமானப்படை தளபதியொருவரோ, பாரிய குண்டுவீச்சு விமானங்களில் சீனாவிற்கு தொழில் முயற்சியாளரை ஏற்றி இறக்கும் போக்குவரத்து சேவையை மேற்கொண்டு இரகசியமாக பணம் சம்பாதித்துள்ளாராம். அண்மையில் கடற்படையின் கப்பலொன்று வேண்டுமென்றே கடலில் மூழ்கடிக்கப்பட்டு உதிரிப்பாகங்கள் களவாக விற்கப்பட்டுள்ளதாம்.

1992ஆம் ஆண்டு முதல் மூன்று மாதங்களில் மட்டும் காத்கசல் இராணுவ வட்டாடாரப் பிரிவில் 1100க்கு மேற்பட்ட புகையிரத சரக்குப் பெட்டிகள் மாயமாக மறைந்தன. இவை ஒவ்வொன்றிலும் இருபது தொன் நிறையான பீரங்கிக்கான வெடிகுண்டுகள் இருந்தன. இக் களவுகள் தொடர்கின்றன.

எனவே இன்று எழுகின்ற கேள்வி என்னவென்றால் மொஸ்கோவினதும், அதன் அண்டை நாடுகளினதும் பாதுசாப்பு இனி எவ்வாறு உறுதியாக இருக்கும் என்பதேயாகும்.

பிரித்தானியாவிலுள்ளஇராணுவப் பயிற்சி நிலையமான சான்ட்கேஸ்ட்டின்(Sandhurst) அதிகாரி ஒருவர் ருஷ்ய இராணுவம் பற்றிக் குறிப்பிடுகையில் ''இன்று ருஷ்ய இராணுவம் எவருக்கும் ஓர் அச்சுறுத்தலாக இல்லை. அவர்களது போர் ஆயத்த நிலை என்பது சாதாரண ஒரு சாரணர் நிலையை விடச் சற்று மேலானது. அவ்வளவே'' என்றார். இராணுவத்தை மறுசீரமைக்க எடுக்கப்படும் முயற்சிகள் நிதியின்மை, புதிதாகச்சேர எவரிடத்திலும் ஆர்வமின்மை அரசியல் இலக்கின்மை காரணமாக தடைப்படுகின்றது.

இருந்த போதும் மேற்குலகம் விரும்பாத ஒரு திருப்பம் இப்போது ஏற்பட்டுள்ளது. ஏனைய சுதந்திர நாடுகளில்

யத் தேசிய வாதிகளோ இவ்வாறு வாழும் 25 மில்லியன் ருஷ்ய இனத்தவர் ''பணயக் கைதிகள்'' போல இருப்பதாக குற்றம் சாட்டுகின்றனர். அதே சமயம் தம்மை ருஷ்யச் செல்வாக்கு வட்டத்துக்குள் வைத்திருக்க ருஷ்ய இராணுவம் பயன்படுத்துவதாக உக்ரேன் போன்றவை குற்றம் சாட்டுகின்றன. மெல்டோவா, ஜோர்ஜியா, தஜிகிஸ்தான் போன்றவற்றில் ருஷ்ய இராணுவத் தலையீடு நேரடியாகவும், மறைமுகமாகவும் உள்ளது. குறிப்பாக ஜோர்ஜியாவில் இத் தலையீடு ஜோர்ஜியாவிற்குஎதிரானஆப்காசியா கிளர்ச்சியாளருக்கு ஆதரவாக அமைந்ததாலேயே இன்று ஜோர்ஜியாவிலிருந்து பிரிய விரும்பும் ஆப்காசியப் பகுதி போராளிகள் தமது தலைநகரமாக கருதும் சுகுமியை (SUKUMI) அண்மையில் கைப்பற்றிவிட்டனர். ஜோர்ஜிய தலைவர் எட்வர்ட் ஷெவட்நாட்சே ருஷ்யா துரோகம் இழைத்ததாகக் கண்டிக்கிறார். ஆப்காசிய போராளிகட்கு ருஷ்ய இராணுவம் போர் விமானங்களைக் கூட வழங்கியுள்ளது. ஜோர்ஜியா, ருஷ்யா செல்வாக்கிற்குள் வராது தனித்து நிற்பது இங்கு குறிப்பிடவேண்டியது. அது போலவே லிதுவேனியா போன்ற பகுதிகளில் மிகச் சிறுபான்மையினராகவுள்ள ருஷ்யர்பற்றி யெல்ட்சின்கவலைப்படுகிறார். அடுத்த பத்து வருடங்களுக்குள் பால்டிக் கடலில் இருந்து சீனா வரை பரந்துள்ள ருஷ்ய எல்லைப் பகுதி மிகுந்த கொந்தளிப்பாக விருக்கப் போவதாக கருதப்படுகின்றது. பல முன்னையகுடியரசுகள் 200க்கு மேற்பட்ட எல்லைத் தகராறுகளில் சிக்கியுள்ளன. அது மட்டுமன்றி பலவற்றில தேசிய வாதிகள், மத அடிப்படை வாதிகள், பொதுவுடமை வாதிகள், சனநாயக சீர்திருத்த வாதிகள் என நான்கு முனைப் போட்டி காரணமாக உள் நாட்டுப் போர்கள் பரவும் அபாயம் உள்ளது. எனவே இத்தகைய நிலையில் ருஷ்யாவே இத்தகைய சிக்கல்களைத்தீர்க்கும் நிலையில் இருக்க வேண்டும், என்கிற நிலைப்பாடு மேற்குலகில் சந்தேகத்துடன் நோக்கப்படுகின்றது. இவ்வாறு பழைய பரந்த ருஷ்யக் கனவிலிருந்து இராணுவத்தை மீட்காமல் வைத்திருப்பதன் மூலம் இராணுவத்தைக்கவர யெல்ட்சின் முயல்வதும் தெரிகின்றது.

எனவே எப்படிப் பார்த்தாலும் ருஷ்யாவின் நிலை மிகுந்த இக்கட்டிலே உள்ளது. மேற்குலகோ ருஷ்யாவின் நிலைமையை உள்ளூர மகிழ்ச்சி

திராவிடர் இயக்கத்தின் எழுச்சியின் மூலம் பாரதிதாசன் பிறப்பெடுத்தார். இவை போல வீறு கொண்டெழுந்து நிற்கும் தமிழீழ விடுதலைப் போராட்டம். ஆற்றல் மிக்க பல்வேறு கவிஞர்களைப் பிரசவித்திருக்கிறது, இவர்கள் காட்டிடையிலான முகாம்கள் பற்றி கற்பனையில் கண்டவாகளாக இல்லாமல் அத்தகையவற்றில் வாழ்ந்து. போராட்ட வாழ்க்கைக்கு பழக்கப்பட்டவர்களாகவும்-போராட்டத்தோடு இரண்டறக் கலந்தவர்களாகவும் இருப்பது இவர்களது படைப்புக்களின் உயிரோட்டத்திற்கு துணை செய்வதாகும். இத்தகைய கவிஞர்களின் வரிசையில் நிலாதமிழின்தாசனுக்கும் குறிப்பிடக்கூடிய இடமுண்டு என்பதற்கு 'நாளை' கட்டியம் கூறுகின்றது.

குண்டு விழுந்திடும்-குடிசை எரிந்திடும் - குடும்பம் சிதறிவிடும். ஆனால் இந்தத் துயர் கண்டு அழுதிடும் தன்மை மறைந்து கண் கனலை உமிழ இருப்பது மிகவும் பாராட்டக் கூடியதாகும்.

அடிமையென அகதியென அகிலந்தோறும் அல்லலுறும் நிலை ஒழிந்து உரிமைபெற்று-குடியரசாக மக்கள் எல்லாம் குலவி வாழ - விடுதலையாம் சுகந்தத்தின் இன்பம் துய்க்க தமிழினமே வேங்கையாவாய் என்று கவிஞர் அழைப்பு விடுவது இன்றைய சந்ததியின் செவிகளில் உறைக்கும். அதனால் அனைவரும் அணி திரண்டு பரணி பாடும் நிலை உருவாகும். இது தலைவர் பிரபாகரன் காலத்தில் தமிழீழம் விடுதலை பெற்றது என்று வரலாறு பதிக்கப்படுவதற்கு இட்டுச் செல்லும் என்பது உறுதி.

செயலுக்கு உந்தும் இப்படைப்பு போல. இன்னும் பல வெளியிடப்பட வேண்டும் என்றும், கடந்த இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக எழுதிவரும் கவிஞரின் படைப்புகள் அனைத்தும் தொகுப்புரு பெறவேண்டும் என்றும் மனம் அவாவுறுகின்றது.

யாகவுள்ளது. தனது பாதுகாப்பு அமைச்சராக ஜெனரல் பாவெல் கிரச்சேவை நியமித்திருப்பதன் மூலம் இராணுவத்தை தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க யெல்ட்சின் முயல்வதும் தெளிவாகின்றது. எனவே, இன்று, யெல்ட்சின் ''ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரோ'' எனஆடத் தொடங்கிவிட்டார்.

ஆனால் எதிர்பார்த்தது போலவே இவ் உத்தரவுகளைப் புறம் தள்ளிய நாடாளுமன்றம் யெல்ட்சினை பதவி நீக்கம் செய்வதாக அறிவித்து புதிய சனாதிபதியாக ருட்ஸ்கோவை நியமித்து, புதிய பாதுகாப்பு அமைச்சரையும் நியமித்துள்ளது. அது மட்டுமன்றிநாடாளுமன்றத்திற்குள் பிரதிநிதிகள் இரவு பகலாக இருந்தும் வருகின்றனர். எனவே இப்போது குழப்பம் உச்சம் அடைந்துவிட்டது. ஏனெனில் இன்று ருஷ்யாவில் இரண்டு சனாதிபதிகள், இரண்டு பாதுகாப்பு அமைச்சர்கள்; இரண்டு அரசாங்கங்கள் முதியோர் உணவிற்காக இரத்தல், அழுக்கடைந்த தெருக்கள், அதிகரிக்கும் களவுகள் என நிலை இழிவடைகின்றது. மேல் மட்டங்களில் ஊழல் தலை விரித்தாடுகின்றது. மேற்கு நாடுகளில் உள்ள 'மாபியா' போன்ற குண்டர் குழுக்கள் மொஸ்கோவில் அட்டகாசம் புரிகின்றனர். காவல் துறை இயலாமை நிலையை அடைந்து விட்டது. இரகசிய வன்முறை உலகம் ருஷ்யாவிலும் உருவாகிவிட்டது. எனவே எப்படிப் பார்த்தாலும் ஒரு தெளிவான அரசியல் நிலைப்பாடு இன்று ருஷ்யாவின் அவசியமாகிவிட்டது. எனவே அடுத்து யெல்ட்சின் என்ன செய்யப் போகிறார்? ருஷ்ய இராணுவம் என்ன முடிவினை எடுக்கப் போகின்றது? ருஷ்யாவின் ஏனைய குடியரசுகள் சுயாட்சிப் பகுதிகள் என்ன செய்யும்? என்பன இன்று உலக அரங்கின் மிகப் பரபரப்பான செய்தித் தலைப்புகளாகிவிட்டன.

குறிப்பாக ஒரு காலகட்டத்தில் ருஷ்யப் புரட்சியின் காவ சேவை நியமிக்கவும், அவரும் தனது ஆதரவை யெல்ட்சினுக்கு இப்போது தெரிவித்துள்ளார். அத்தோடு தனது பாதுகாப்பிற்கு மிக நம்பிக்கையான மொஸ்கோவை அண்மித்த பகுதிகளைச் சேர்ந்த படையணிகளையே யெல்ட்சின் பயன்படுத்தி வருகிறார். ஆனால் இவையெல்லாம் மேலோட்டமானதகவல்களே. உள்ளே ருஷ்ய இராணுவம் சிதறி சிதைந்து பழைய பெருமைகளை இழந்துவிட்டதாகவே கருதப்படுகின்றது.

இன்றைய செஞ்சேனையின் நிலை நம்ப முடியத அளவுக்கு தரம் குன்றிவிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பல்வேறு முன்னாள் சோவியத்குடியரசுகளில் நிலை கொண்டுள்ள இராணுவப் பிரிவுகளுக்கும், மொஸ்கோவிற்கும் உள்ள தொடர்புகள் சீர் குலைந்து அவை தன்னிச்சையாக செயல்படஆரம்பித்து விட்டதாக வேறு கூறப்படுகின்றது. இதனால் தமது வேதனம், பராமரிப்புக்காக பெருமளவு இராணுவ தளகும்.

பிரித்தானியாவிலுள்ளஇராணுவப் பயிற்சி நிலையமான சான்ட்கேஸ்ட்டின்(Sandhurst) அதிகாரி ஒருவர் ருஷ்ய இராணுவம் பற்றிக் குறிப்பிடுகையில் ''இன்று ருஷ்ய இராணுவம் எவருக்கும் ஓர் அச்சுறுத்தலாக இல்லை. அவர்களது போர் ஆயத்த நிலை என்பது சாதாரண ஒரு சாரணர் நிலையை விடச் சற்று மேலானது. அவ்வளவே'' என்றார். இராணுவத்தை மறுசீரமைக்க எடுக்கப்படும் முயற்சிகள் நிதியின்மை,புதிதாகச்சேர எவரிடத்திலும் ஆர்வமின்மை அரசியல் இலக்கின்மை காரணமாக தடைப்படுகின்றது.

இருந்த போதும் மேற்குலகம் விரும்பாத ஒரு திருப்பம் இப்போது ஏற்பட்டுள்ளது. ஏனைய சுதந்திர நாடுகளில் வதியும் சிறுபான்மை ருஷ்ய இனத்தவர் தொடர்பாகஅவர்களது பாதுகாப்பு பற்றிய கவலை இன்று இராணுவத்தில் மட்டுமல்ல, யெல்ட் சின் வரை அது பரவியுள்ளது. ருஷ் தேசிய வாதிகள்,மத அடிப்படை வாதிகள், பொதுவுடைமை வாதிகள், சனநாயக சீர்திருத்த வாதிகள் என நான்கு முனைப் போட்டி காரணமாக உள் நாட்டுப் போர்கள் பரவும் அபாயம் உள்ளது. எனவே இத்தகைய நிலையில் ருஷ்யாவே இத்தகைய சிக்கல்களைத்தீர்க்கும் நிலையில் இருக்க வேண்டும், என்கிற நிலைப்பாடு மேற்குலகில் சந்தேகத்துடன் நோக்கப்படுகின்றது. இவ்வாறு பழைய பரந்த ருஷ்யக் கனவிலிருந்து இராணுவத்தை மீட்காமல் வைத்திருப்பதன் மூலம் இராணுவத்தைக்கவர யெல்ட்சின் முயல்வதும் தெரிகின்றது.

எனவே எப்படிப் பார்த்தாலும் ருஷ்யாவின் நிலை மிகுந்த இக்கட்டிலே உள்ளது. மேற்குலகோ ருஷ்யாவின் நிலையை உள்ளூர மகிழ்ச்சியோடு வரவேற்றாலும் ஒரேயடியாக ருஷ்யா சிதைவது தமது செல்வாக்கை குறைத்து விடும் என்பதால்யெல்ட்சினை முழுமையாக ஆதரிப்பது

(6ஆம் பக்கம் பார்க்க)

## உங்கள் பாதுகாப்புக்கு சுகாதாரம்தான் கவசம்

# - எல்ரோர் கொலரா ஆள்கொல்லி நோயல்ல -

யாழ். குடாநாட்டில் சொலரா பற்றிய பயம் பூதாகாரமாக விஸ்வரூபமெடுத்து வருகின்றது. இந்நோய் லிப்றியா எனப்படும் ஒருவகை பக்ரீறியா வாய் மூலம் உட்செல்வதால் ஆரம்பிக்கின்றது. 'வங்காள கொலரா' அல்லது ELTOR எனப்படும் வாந்திபேதி நோய் எப்படிப் பரவியது என்பது பற்றிச் சுகாதார அமைச்சு ஆராய்ந்து வருகின்றதாம். இது இவ்வாறிருக்க, தமிழ்நாட்டிலிருந்து இலங்கை திரும்பியுள்ள தமிழ் அகதிகளினால் இந்நோய் பரவியிருக்கலாம் என யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் தொற்றுநோய் இயல் நிபுணரும், பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளருமாகிய டாக்டர் கே. ரி. சிவபாலன் தலைமையில் கூடிய மாநாட்டில் துறைசார் நிபுணர்கள் ஏகமனதாக முடிவெடுத்துள்ளனர்.

ஆரம்பத்தில் இந்நோய் கொலரா தானா என்று பல தரப்பட்ட அபிப்பிராயங்கள். இன்னதென்று அடையாளங் காணாமல் வயிற்றோட்டம் என்றும், கொலரா என்றும் பிதற்றிக் கொண்டு எமது கையாலாகாத்தனத்தைக் காட்டிக் கொண்டிருந்த சமயம், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட நுண் உயிரியல் துறையினர் நோய்வாய்ப்பட்டவர்களின் மலத்தை ஆராய்ந்து கொலரா என்று ஊர்ஜிதம் செய்தனர். ஆனால் சாதாரண வயிற்றோட்டத்தையும் கொலரா என்று சந்தேகிக்கும் சோகமும் நிகழ்ந்து வருகிறது.

தீவிரமில்லாத இந்த எல்ரோர் (கொலரா) தொற்று நோய் குறித்துக் கொழும்பிலிருந்து வெளியாகும் வாராந்த தொற்று நோயியல் அறிக்கை மே 15-21, 1993 தெரியப்படுத்தியது. கொலரா பங்களாதேஷ், மேற்கு வங்காளம் (கல்கத்தா), தமிழ்நாடு மற்றும் இலங்கையிலும் பரவும் சாத்தியக் கூறுகள் இருப்பதாக சுமார் நான்கு மாதங்களுக்கு முன்பு உலக சுகாதார ஸ்தாபனம் சிவப்புக் கொடி காட்டியிருந்தது. சும்மாயிருப்பது சுகம்தரும் என்று இருந்துவிட்டு, வெள்ளம் வந்த பின் அணைகட்டலாம் என்பதற்குக் கொலரா ஒரு உதாரணமோ?

### கவலைப்பட வேண்டிய அவசியமில்லை

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட சமுதாய மருத்துவ விரிவுரையாளராகிய டாக்டர் செ. சு. நச்சினார்க்கினியன் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளராகப் பணிபுரிந்து அனுபவத்திறன் மிக்கவர். அவர் கொலரா பற்றிக் கூறுவது கவனிக்கத் தக்க ஒன்று.

> ''யாழ்ப்பாணத்தில் பரவி வரும் வாந்திபேதி நோயினால் யாரும் இலகுவில் இறந்து விட முடியாது வயிற்றோட்டம், வாந்தி காரணமாக ஏற்படும் வரட்சியை ஜீவனி அருந்துவதால் ஈடுகட்ட முடியும் நோய் அறிகுறிகள் கண்டதும் உடன் வைத்திய உதவியை நாட வேண்டும். அல்லது வீணாகச் சாவினைச் சந்திக்க வேண்டிவரும்.''
>
> டாக்டர் நச்சினார்க்கினியன்.

''யாழ்ப்பாணக் குடாநாட்டில் பரவி வரும் வாந்திபேதி நோயினால் யாரும் இலகுவில் இறந்து விட முடியாது இந்தக் கொலரா ஆள்கொல்லி அல்ல என்று உலக சுகாதார ஸ்தாபனமே உறுதி செய்துள்ளது. வாந்திபேதியினால் நோயாளியில் ஈரத்தன்மை வற்றி வரட்சி ஏற்படுத்துவதைத் தடுக்க ஜீவனி (O.R S) மற்றும் நீராகாரம் அருந்துவதன் மூலம் ஈடுகட்ட முடியும். அத்துடன் நோய் அறிகுறிகள் கண்டதும் உடன் வைத்திய உதவியை நாடவேண்டும். அல்லது விரைவாகச் சாவினைச் சந்திக்க வேண்டி வரும்.'' என்கிறார் அவர்.

கொலரா நோய், நோய்வாய்ப்பட்டவர்களின் மலத்திலிருந்து பரவுகிறது. நீர், மனிதனின் கரங்கள் மற்றும் ஈக்கள் மூலம் இந்த நோய்க் கிருமிகள் பரவுகின்றன. நோய் கண்டவர்களின் மலத்தின்மீது இருந்து உறிஞ்சும் ஈ, உமிழ் நீருடன் நோய் பரப்பும் கொலராக் கிருமிகளையும் உறிஞ்சுகின்றது. பிறகு உணவின் மீது இருந்து ஒருவகை நொதியங்களைப் பாய்ச்சுகிறது. அத்துடன் கொலராக் கிருமிகளும் சேர்ந்து வெளியாகின்றன. ஈ கால்மயிரில் உள்ள கிருமிகளையும் உதறி விடுகின்றது. எமது துரதிருஷ்டம் உணவுடன் நோய்க் கிருமிகளும் உட்செல்கின்றன. நோயாளியின் மலத்தை பல்கலைக்கழக நுண் உயிரியல் துறை ஆய்வு கூடத்தில் ஆராய்ந்ததில் கோடானுகோடி கொலரா நோய்க் கிருமிகளை உருப்பெருக்கிக் கண்ணாடி மூலம் காணப்பட்டன.

இந்தப் பரிசோதனையைச் செய்வதற்கு 24 மணி நேரமும் மின்சாரம் அவசியம் என்று அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. மின்சாரம் இல்லை என்று பொதுமக்களை மருத்துவபீடம் மிரள வைக்கவில்லை மின்சாரம் இல்லாத வேளைகளில் 30 முதல் 40 பாகை இயற்கை வெப்பத்தில் இந்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய சூழலில் இத்தகைய முயற்சிகள் பாராட்டுக்குரியவை. இந்த முயற்சியின் தொடர்ச்சியை மற்றவர்களும் பின்பற்றலாம்.

கொலராக் கிருமிகள் நீர் மூலமும் தீவிரமாகப் பரவுகின்றன. ஆகவே கால்வாய்கள், நீர்த்தேக்கங்களுக்கு அருகில் வளரும் பொன்னாங்காணி, வல்லாரை போன்ற கீரை வகைகளைத் தற்காலிகமாகத் தவிர்த்துக் கொள்ளும்படி எச்சரிக்கிறார் டாக்டர் நச்சினார்க்கினியன். வல்லாரை, பொன்னாங்காணி வகைகளை கடையில் வாங்குகிறோம் என்பதற்கு மேலாக, அவை எங்கே முளைக்கின்றன என்பது எமக்குத் தெரியாது.

### யாழ் குடாநாட்டில் கொலரா

கொலரா நோய் இந்தியாவில் ஆயிரக்கணக்கானவர்களின் சாவுக்குக் காரணமாகியுள்ளது. வாந்திபேதி - கொலரா நோய் திரும்பத் திரும்ப கல்கத்தா போன்ற பெருநகரங்களில் மிகமிகத் தீவிரமாகப்பரவுவதற்குக்காரணம் சுகாதாரமான முறையில்

மதன்

வாழ்க்கையைப் பேணாததே என்று உணரப்படுகிறது. 1974-இல் இந்தோனேசிய ரகக் கொலரா இலங்கையைத் தாக்கியது. அது யாழ்ப்பாணத்திலும் பரவியது. அதற்குப்பின் ''வங்காள ரக'' எல்ரோர் கொலரா 1988 இல் யாழ்ப்பாணத்தைத் தாக்கிய நினைவுக்கு வருகிறது. யாழ்ப்பாணத்தில் கொலரா பரவுவதற்கு முதன்மையான களம் சென்னைதான். 1988 இல் கிளிநொச்சி உட்பட யாழ். மாவட்டத்தில் 321 பேருக்கு இந் நோய் கண்டிருப்பதாகச் சந்தேகிக்கப்பட்டது. இதில் 142 பேர் கொலராவால் உண்மையாகப் (POSI-TIVE CASES) பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 10 பேர் இறந்திருக்கிறார்கள் என்று தரவுகள் தெரிவிக்கின்றன.

கொலரா நோய் மீளவும் இம் முறை யாழ். குடாநாட்டில் பரவிவருகிறது. ஆனால் ரெற்ராசைக்கிளின் என்ற மருந்தின் உபயோகம் இந்த நோயைத் தீவிரமாகக் கட்டுப்படுத்தும் என்று தொற்று நோய் இயல் நிபுணர் டாக்டர் கே.ரி. சிவபாலன் நம்பிக்கை தெரிவிக்கிறார்.

யாழ். நகரில் கடந்த செப்ரம்பர் 13 ஆம் திகதி கனகம்மா என்ற பெண் (வயது 90+) கொலரா நோயினால் பாதிக்கப்பட்டு மரணமான தொடர்சூழலில் நடந்த சடங்குகளில் பங்குபற்றிய சிலருக்கு வாந்திபேதி கண்டதும் துள்ளி எழுந்து சுகாதார ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. சுகாதார பரிசோதகர்கள் மரணம் சம்பவித்த வீட்டிற்கு அருகிலுள்ள (ஆஸ்பத்திரி வீதி ஆசீர்வாதம் ஒழுங்கை) குறோறின் போடும் பணியில் இறங்கினர். இந்த நடவடிக்கை யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் சேவைக்குப் பெருமை சேர்க்கிறது. இந்த மரணவீட்டில் ஒட்டி உறவாடிய உறவினர்களுக்கு இந் நோய் ஏற்பட்டிருப்பது சுகாதார வைத்திய பரிசோதகர்களால் கண்டு பிடிக்கப்பட்டது. அதன் பின் வழமையான தொடர் நடவடிக்கைகள்.

(2ஆம் பக்கம் பார்க்க)

# வரலாறுபடைத்த புலோப்பளைச

புலோப்பளை-அல்லிப்பளைப் பகுதியில் மண்ணை ஆக்கிரமித்து, கணக்கில் படையெடுத்துவந்த சிங்களப் பேரினவாதப் படைகளு யினரை அழித்து, இரண்டுடாங்கிகளையும், இரண்டு கவச வ படைத்த 80 விடுதலைப்புலிகள் போராளிகள் வீரச்சாவடைந்த தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.



**மேஜர்செந்தூரன்(பிரேம்நாத்)**
சிதம்பரப்பிள்ளை சிவரூபன், துன்னாலை தெற்கு, கரவெட்டி.



**மேஜர் செல்வம்**
சோமு முருகேசு, 5 ஆம் கட்டை, எருக்கலம்பிட்டி, மன்னார்.



**மேஜர் மயூரா (யாழினிசை)**
திருலோகசிங்கம் செல்வராணி, கீரிமலை வீதி, காங்கேசன் துறை. தற்போதைய முகவரி: இல. 5, மானிப்பாய் மேற்கு, கட்டுடை.



**மேஜர் உதயகுமார் (கிச்சான்)**
சடாமகாலிங்கம் சிவசுப்பிரமணியம்... கிறிஸ்ரி அடம்பன். தற்போதைய முகவரி: அகதிமுகாம் மடு.



**மேஜர் நரேஸ் (நாயகன்)**
சிங்கராசா அருள்நாயகம், வேப்பங்குளம், 7 ஆம் வட்டாரம, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.



**மேஜர் சுகன்யா**
நடராசா சுபாசனா, திக்கம், அல்வாய் மேற்கு, அல்வாய்.



**கப்டன் கல்யாணி**
தர்மபாலசுப்பிரமணியம் ரேணுகாதேவி, எல்.பி.3 கிளிவெட்டி, மூதூர் திருக்கோணமலை.



**கப்டன் சத்தியன்**
சிவஞானம் ரமேஸ், 2ஆம் யூனிட் ஆலடி, வவுனிக்குளம, கிளிநொச்சி.



**கப்டன் தமிழ்மறவன்**
ஆறுமுகம் காண்டீபன் நட்டாங்கண்டல், மாங்குளம், கிளிநொச்சி.



**கப்டன் விநோதன்**
நாகலிங்கம உதயகுமார், ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.



**கப்**
கந்தசாமி
மகாவித்தி
சாவகச்சே



**கப்டன் உதயசீலன் (டெனிசன)**
கணபதிப்பிள்ளை, ஜெகதீஸ்வரன், முருங்கன். தற்போதைய முகவரி: இந்தியா.



**கப்டன் சுதர்சன்**
செல்லத்துரைஜெயசீலன்திருக்கோணமலை. த. முகவரி: மடுத்தேவாலயம், பரப்புக்கடந்தான் வீதி, மன்னார்.



**கப்டன் கீதன் [கதிர்]**
இராஜையா பாஸ்கரன், சிவபுரி, திருக்கோணமலை.



**கப்டன் கருணா (சர்மிலன்)**
அருளம்பலம் கின்சிலி, அழவக்கை முருங்கன், மன்னார்.



**லெப். அன்பழகி [அபி]**
சபாபதி லட்சுமி, பூநகர் ஈச்சிலம்பற்றை, மூதூர்.



**லெப். குயிலி**
ராஜேந்திரன் இன்பவதனி, பன்குடாவெளி, செங்கலடி மட்டக்களப்பு.



**லெப் சீலன் (கலைம)**
தர்மகுலசிங்கம், சுந்தரராஜன் உடுப்பிட்டி, யாழ்ப்பாணம். தற்போதைய முகவரி: 3-ம் யுனிட், யோகபுரம் மல்லாவி.



**லெப்**
(
குணரட்ண
வேலணை




















**கப்டன் உதயசீலன் (டெனிசன)**
கணபதிப்பிள்ளை, ஜெகதீஸ்வரன், முருங்கன். தற்போதைய முகவரி: இந்தியா.




**கபடன் சுதர்சன்**
செல்லத்துரைஜெயசீலன்திருக்கோணமலை. த. முகவரி: மடுத்தேவாலயம், பரப்புக் கடந்தான் வீதி, மன்னார்.



**கப்டன் கீதன் [கதிர்]**
இராஸையா பாஸ்கரன, சிவபுரி, திருக்கோணமலை.



**கபடன் கருணா (சர்மிலன்)**
அருளம்பலம் கின்சிலி, அழவக்கை முருங்கன், மன்னார்.



**லெப். அன்பழகி [அபி]**
சபாபதி லட்சுமி, பூநகர் ஈசசிலம்பறுறை, மூதூர்.



**லெப். குயிலி**
ராஜேந்திரன் இன்பவதனி, பன்குடாவெளி, செங்கலடி மட்டக்களப்பு.



**லெப சீலன (சலீம)**
தர்மகுலசிங்கம், சுந்தரராஜன் உடுப்பிட்டி, யாழ்ப்பாணம். தற்போதைய முகவரி: 3-ம் யுனிட், யோகபுரம் மல்லாவி.



**லெப்**
குணரட்ண
வேலணை



**லெப. சிவன**
பாக்கியராசா மங்களேஸ்வரன், பிள்ளையார் கோவிலடி, உப்புக்குளம், மன்னார்.



**லெப். விந்தன்**
கந்தையா சிவரூபன் 6-ம் வட்டாரம், தாமரைக் கேணியடி வீது, முழமுனை.



**லெப [illegible] [மயூஸ்]**
கந்தப்பிள்ளை விஜிதன், வறறாப்பளை, முள்ளியவளை முல்லைத்தீவு.



**லெப், ஐயாத்துரை**
வன்னியசிங்கம ஜெயகுமார், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம. த. முகவரி: மாளிகைத்திடல், அடம்பன்.



**லெப். சங்கர்**
கனகரத்தினம் கனகசிங்கம், கல்லிக்குளம், வவுனியா. தற்போதைய முகவரி: பெரியமடு, நெடுங்கேணி.



**லெப் ஒப்பிலாமணி (சிவராஜ்)**
அந்தோனிப்பிள்ளை செல்லத்துரை, ஆனைமடு, புத்தளம். த. மு: கப்பாச்சி செட்டிகுளம்.



**லெப, [illegible]**
ஆறுமுகம் பிரதீபன், முதலாம் வட்டாரம், துர்க்காசிலையடி. புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.



**லெப். [illegible]**
வல்லிபுரம்
கூளாம் கு



**2ஆம் லெப், சசி**
சண்முகநாதன் வசந்தலாவேணி, திக்காய், வன்னேரிக்குளம், கிளிநொச்சி.



**2ஆம லெப. மதியழகன்**
பசுபதிப்பிள்ளை தயாரஞ்சிதன், ராமையன்கல், பூவரசங்குளம், வவுனியா.



**2ஆய லெப, சந்தரன்**
அருளப்பு பலிப்சாள்ஸ், ஜேசுதாஸ் வீதி, இரணைப்பாளை, புதுக் குடியிருப்பு.



**2ஆம் லெப், மதுலா**
கணபதுப்பிள்ளை யாாமுத்து, திகிலிவெட்டை, சந்திவெளி, மட்டக்களப்பு.



**2ஆம லெப [illegible] (ரகிம்)**
சுப்பிரமணியம் கடணசமூர்த்தி, பூவரசம்குளம், வவுனியா. த. மு: மடுத்தேவாலயெ.



**2ஆம லெப், களப்பாடி (விஷ்ணுகாந்தன்)**
செல்லத்துரை புனிதகுமார், 1ஆம் யூனிட், முரசுமோட்டை



**2ஆம் லெப, வேல்விழி**
சூசை குரூஸ, லெனிட் கொலஸ்ரிக்கா, தலைமன்னார் கிராமம்.



**2ஆம்**
இராமசாப
நகர், வவு



**2ஆம லெப, செந்தமிழ் (அரவிந்தன்)**
வெற்றிவேல் ஞானசேகரம், சம்மளம் குளம் வவுனியா.



**வீரவேங்கை வெங்கடேஸ்வரன்**
வடிவேல் சிவகுமார், திலீபன் வீதி. மந்துவில்,



**வீரவேங்கை சுரேஸ்குமார்**
கதிரேசு சசிக்குமார். தற்குணேஸ்வரன் வீதி, உதய நகர், கிளிநொச்சி.



**வீரவேங்கை நவம்**
முனீஸ்வரன் தவசீலன், மகாரம்பைக்குளம், வவுனியா.



**வரவஙகை செவ்வந்தி**
செல்வராசா சகுந்தலாதேவி கன்னியா, த. மு: மந்திரிக், கிராம முகாம் கிளிநொச்சி.



**வீரவேங்கை கவிமலர்**
நல்லையா சத்தியகலா, இல. 10, சாலோம் நகர், இருபது வீட்டுத் திட்டம், புதுமுறிப்பு.



**வீரவேங்கை தாட்சாயினி**
சங்கரப்பிள்ளை விக்னேஸ்வரி, மூத்தவிநாயகர் வீதி, கச்சேரி-நல்லூர்வீதி, யாழ்ப்பாணம்.



**வரவ[illegible]**
நல்லதம்
வெளி,
சேனை.

# ...ோப்பளை சமரில் வீரச்சாவடைந்தோர்

...லையை ஆக்கிரமித்து, மக்களை அழிக்கும் நோக்கத்துடன் பல்லாயிரக் ...பரினவாதப் படைகளுடன் நேருக்குநேர்மோதி 100க்கு மேற்பட்ட படை..., இரண்டு கவச வாகனங்களையும் தகர்த்தெறிந்து வீரச்சாவினை ...கள் வீரச்சாவடைந்தனர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் ...ாள்கின்றனர்.



**மேஜர் குமரன்**
மணியம் சிறிசிவநாதன், பழம் றோட், இருபாலை வீதி, கோப்பாய்.



**மேஜர் செந்தில்**
அந்தோனிப்பிள்ளை ப...த்ம நாதன், கீரி, மன்னார்.



**மேஜர் துசியந்தன்**
தர்மலிங்கம் ஜெயக்குமார், புதுக்குளம் வீதி, ஒட்டிசுட்டான், முல்லைத்தீவு.



**...ன் விநோதன்**
...உதயகுமார், ..., கிளிநொச்சி.




**கப்டன் பிரதீபன்**
கந்தசாமி ம...ாதன், மகளிர் மகாவித்தியாலய ஒழுங்கை, சாவகச்சேரி.



**கப்டன்மருத்துவர் (லூக்காஸ்)**
சாமுவேல் செல்வானந்தன், புதுக்கமம், உயிலங்குளம், மன்னார்,



**கப்டன் செந்தூரன் (புமலாயன)**
மரியாம்பிள்ளை கமிலஸ், சூரிய கட்டைக்காடு, நானாட்டான், மன்னார்.



**கப்டன் நகுலன்**
நாகமணி கேதீஸ்வரன், நேரியகுளம், செட்டிக்குளம். தற்போதைய முகவரி: எழுத்தூர் மன்னார்.



**கப்டன் சாந்தன் (மோகனரூபன்)**
தங்கவேல் ராதாமோகன், துன்னாலை வடக்கு, கரவெட்டி.



**கப்டன் சேரன் (ஈசன)**
நடராஜா சர்வேஸ்வரன், காரைநகர் த.முகவரி: 39/24 சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை.



**கப்டன் பாலா (பூகாந்த்)**
நாகலிங்கம் சுரேந்திரன், சந்திவெளி, மட்டக்களப்பு.



**...சீலா (...)**
...ங்கம், சுந்தரராஜன் ..., யாழ்ப்பாணம். ...ய முகவரி: 3-ம் ...கபுரம் மல்லாவி.



**லெப் கார்வண்ணன் (ரகுநாத்)**
குணரட்ணம் குணராஜ், வேலணை த.மு: கல்வியங்காடு



**லெப், சிவானந்தன**
அந்தோனி..., கற்கடந்தகுளம், ...ருங்கன்.



**லெப், தியாகு (ஈகவரசன்)**
இராசேந்திரன் யோகநாதன், கீரிமலை, த. முகவரி: கந்தரோடை ஒழுங்கை, சுன்னாகம்.



**லெப். இளமுருகன்**
ஐயாத்துரை அனபழகன், புங்குடுதீவு - 1, தற்போதைய முகவரி: செல்லமுத்து முகாம், கனகசபை வீதி, மானிப்பாய்.



**லெப். குமணன்**
செல்வரட்ணம் குணரட்ணம், ஜீவநகர், முருங்கன்.




**லெப், தம்பித்துரை**
தாசன் அன்ரன், பரப்பான் கண்டல், மன்னார். தற்போதைய முகவரி: குருவில்லான், வட்டக்கண்டல்.



**லெப். உமா**
அந்தோனிப்பிள்ளை தேவமோகன், இலுப்பைக்குளம், நேரியகுளம். தற்போதைய முகவரி: மடு அகதி முகாம்.









சிலை (கமை)
லிங்கம், சுந்தரராஜன்
டி, யாழ்ப்பாணம்.
தைய முகவரி: 3-ம்
யாகபுரம் மல்லாவி.



லெப் கார்வண்ணன் (ரகுநாத)
குணரட்ணம் குணராஜ், வேலணை த.மு:கல்வியங்காடு



லெப், சிவானநதன
அந்தோனி ூட, கற்கடந்த குளம, ருங்கன்.



லெப், தியாகு (ஈகவரசன்)
இராசேந்திரன் யோகநாதன், கீரிமலை, த. முகவரி: கந்த ரோடை ஒழுங்கை, சுன்னாகம்.



லெப். இளமுருகன்
ஐயாத்துரை அனபழகன், புங்குடுதீவு - 1, தற்போதைய முகவரி: செல்லமுத்து முகாம், கனகசபை வீதி, மானிப்பாய்.



லெப். குமணன்
செல்வரட்ணம் குணரட்ணம், ஜீவநகர், முருங்கன்.



லெப், தம்பித்துரை
தாசன் அன்ரன், பரப்பான் கண்டல், மன்னார். தற்போதைய முகவரி: குருவில்லான், வட்டக்கண்டல்.



லெப். உமா
அந்தோனிப்பிள்ளை தேவமோகன், இலுப்பைக்குளம், நேரியகுளம். தற்போதைய முகவரி: மடு அகதி முகாம்.



ப, பையநரை
பிரதீபன், முதலாம்
, துர்க்காசிலையடி.
திருப்பு, முல்லைத்



லெப், செம்பிறை (பசுமி
வல்லிபுரம் நளினி, சாஸ்திரி கூளாம் குளம், வவுனியா.



லெப், சசிதரன்
வேலாயுதம் மகேந்திரம், செட்டிக்குளம், வவுனியா.



லெப், கில்மன்
கிருஸ்ணசாமி சின்னவன் (கண்டி), இரத்தினபுரம், கிளிநொச்சி.



லெப். சிவம்
செல்வம் ரவி, வாழைச்சேனை, மட்டக்களப்பு. தற்போதைய முகவரி: மருதோடை, காஞ்சூரமோட்டை.



லெப். செல்வன்
கனகரட்ம ஜீவரட்ணம், அவிசாவளை. தற்போதைய முகவரி: புதிய கொலனி, யாங்குளம், கிளிநொச்சி.



2ஆம் லெப். நவீனன்
செல்வராஜா செல்வேஸ்வரன், கொக்குத்தொடுவாய், தற்போதைய முகவரி: முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு.



2ஆம்லெப். நம்பியாண்டான்
செல்லத்துரை பிரபாகரன், மருக்காராம்பனை, வவுனியா. த. முகவரி: இரணை இலுப்பைக்குளம், வவுனியா.



லெப, வேல்விழி
குரூஸ், லெனிட்
க்கா, தலைமன்
ாமம்.



2ஆம் லெப், தாரகா
இராமசாமி சந்திரா, நித்தியா நகர், வவுனியா. த. மு: மடு.



2ஆம் லெப். நரேந்தினி
அப்பாசாமி அன்னலட்சுமி, இல. 57, கணேசபுரம், கிளி.



2ஆம லெப. நதமதயனி
ஆணுப்பிள்ளை ரகு வட்டக் கண்டல் அடம்பன்.



2ஆம் லெப், சீதாலட்சுமி
சுப்பன் மூனியம்மா, சின்னச் சாளம்பன் ஒட்டிசுட்டான்.



2ஆம் லெப, வாசுகி
குருசுமுத்து தேவதிரவியம், செம்மண்குன்று, பூநகரி.



2ஆம லெப், காரமா
துரைச்சாமி லலிதாதேவி, கோரைக்கல்விமடு, கிரான்.



2ஆமலெப, லசலவம (தனா)
சரிட்டீன் செல்வராணி, வத்திராயன் வடக்கு, தாளையடி.



வயக தாடசாயனி
ள்ளை விக்னேஸ்வரி,
ாயகர் வீதி, கச்சேரி
வீதி, யாழ்ப்பாணம்.



வரவேஙலக துவாரகா
நல்லதம்பி கமலா, சந்திவெளி, மொறக்கொட்டாஞ்சேனை.



வீரவேங்கை ஜெயமதி
கணபதிப்பிள்ளை சரோஜா கரிகாலை, நாகபடுவான், பல்லவராயன்கட்டு பூநகரி.



வீரவேங்கை ஜெரார்த்தனி
சீனிவாசகம் குணவதி, கோப்பாய் வடக்கு, அம்மன்கோவிலடி.



வீரவேங்கை எழில்அருவி
அருள்தாஸ் புஸ்பமலர், விநாயகபுரம், நாச்சிக்குடா, மன்னார்.



வீரவேங்கை ரமணி
ஞானப்பிரகாசம் பெருநாடேட், நாவாந்துறை, யாழ்ப்பாணம்.



வீரவேங்கை சுரபி
முத்துக்குமார் மேகனராணி, 4 ஆம் வாய்க்கால், ஆறுமுகம் கமம், கிளிநொச்சி.



வீரவேங்கை இருதயநாதன்
அமிர்தநாதன் ஜெகநாதன், மானிப்பாய் மேற்கு, மானிப்பாய்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

சிறுகதை

# சரியான பாதை

மலரன்னை

ஆடி மாதத்து வெயிலின் அகோர புழுக்கத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட அருணாசலத்தார் தலையில் போட்டிருந்த சால்வையைக் கையில் எடுத்து உதறியவாறே ''அப்பப்பா! என்ன வெய்யில்! என்ன புழுக்கம்!'' என்று அலுத்துக் கொண்டே வீட்டிலுள் நுழைகிறார்.

நுழைந்தவர் அடுப்படிப் பக்கமாகத் திரும்பி, ''இஞ்சாரும்! செல்லம்!'' என்று கூப்பிடுகிறார். அங்கிருந்து பதிலொன்றும் வராததால் அறைக்குள் எட்டிப் பார்க்கிறார். அங்கே அவரது மனைவி செல்லம் வெறும் நிலத்தில் ஒருக்களித்தவாறு படுத்திருக்கிறாள். கிட்டப் போனவர், ''இஞ்சாரும், நான் வெத்திலைச் சாத்திரியிட்டை எல்லே போட்டு வாறன்'' என்று சொன்னதுதான் தாமதம், மின் பாய்ச்சியதுபோல் செல்லம்மா எழுந்து உட்கார்ந்தாள்.

''என்னப்பா சொன்னது சாத்திரி? கண்ணன் எங்கை இருக்கிறானாம்?''

''சாத்திரி என்ன தேடிப் போய்க் கண்டு கொண்டு வாறதே? உயிருக்குப் பிழையில்லையாம். ஆள் எங்கையோ தலைமறைவாய் இருக்குதாம்.''

''அப்பிடியெண்டால் கண்ணன் ஆமியிட்டைத்தான் அம்பிட்டிட்டானாக்கும். அவங்கள் பிள்ளையை அடிச்சாங்களோ! நொருக்கினாங்களோ? என்ரை பிள்ளை என்ன பாடு படுகிதோ?'' சொல்லியவளின் கண்கள் நீரைச் சொரிந்தன.

''நானெல்லே உமக்குச் சொன்னனான். சும்மா அழுது கொண்டிராதையும் எண்டு. சும்மா அழுகிறதை விட்டிட்டு கடவுளைக் கும்பிடும். அதுக்கு மேல நாங்கள் என்னத்தைத்தான் செய்யிறது. அது சரி இப்ப பிள்ளையள் பள்ளியால வரப்போகுதுகள். சமைச்சுப் போட்டீரே?''

''இல்லையப்பா! எனக்கெண்டால் சமைக்க மனம் ஏவுதில்லை'' என்று செல்லம்மா கூறவே, அருணாசலத்தாருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது.

அருணாசலத்தாருக்குக் கோபம் எல்லை கடந்து விட்டதை உணர்ந்த செல்லம்மா அடுப்படியை நோக்கிப் போனாள். சமையலைத் தொடங்கினாள். சிந்தனை அலைகள் அவளை முந்திக் கொண்டு விட்டன.

மாவிட்டபுரத்தில் அமைதியாக வாழ்ந்த குடும்பம் அது. அவர்கள் வெற்றிலைத்தோட்டம், பெரிய வீடு, வளவு என்று வசதியாக வாழ்ந்து வந்தனர். இருந்தாற் போல் இராணுவம்முன்னேற, அப்படி அப்படியே வீடு வாசல், பொருட்கள், கால்நடை எல்லாவற்றையுமே விட்டு விட்டு, உயிரை மட்டும் காப்பாற்றியவாறு அகதிகளாக ஓடி வந்து விட்டனர். அவர்களின் பின்னால் அவர்கள் வளர்த்த நாய் மட்டும் ஓடி வந்து விட்டது. சில பெறுமதியான பொருட்கள், துணிமணிகள், நகைகள் என்று கொஞ்சத்தைக் கொண்டு வந்து மானிப்பாயில் உள்ள அவர்களது உறவினர் ஒருவரின் வீட்டில் முன்னரே வைத்திருந்தனர். அதுதான் அவர்களுக்கு அந்த நேரத்தில் கைகொடுத்தது. அவர்களுடன் சில நாட்கள் தங்கியிருந்தனர்.

அவர்களது ஐந்து பிள்ளைகளில் மூத்தவன் கண்ணன் ஏ.எல். வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். அவனுக்குப் பரீட்சை வேறு நெருங்கி விட்டது. அவனுக்குப் படிக்கப் புத்தகங்களோ, கொப்பிகளோ ஒன்றுமே இல்லை. எல்லாவற்றையுமே தான் மாவிட்டபுரத்திலேயே விட்டுவிட்டு வந்து விட்டார்களே. பாவம்! அவன் செய்வதறியாது யோசித்தான்.

அவனது நண்பனொருவனது வீடு, அளவெட்டியில் இருந்தது. அவனுடனாவது சேர்ந்து படிக்கலாமென்றால் மானிப்பாயில் இருந்து அளவெட்டிக்குப் போய் வருவது மிகவும் சிரமமாக இருந்தது. அருணாசலத்தார் யோசித்தார். ஐந்து பிள்ளைகளுடன் இன்னொருவர் வீட்டில் தங்குவதும் அவருக்கு நல்லதாகப்படவில்லை. எனவே அளவெட்

அதில் மரக்கறிப் பயிர்வகை செய்ய ஆரம்பித்தார். கண்ணனுக்கும் தனது நண்பனிடம் புத்தகங்கள் கொப்பிகள் மாறிப் படிப்பதற்கு வசதியாக அமைந்தது.

மாதங்கள் சில உருண்டன. ஏ.எல். பரீட்சையும் துவங்கி விட்டது. கண்ணனுக்கு இரண்டு பாடங்களுக்கான பரீட்சை நடந்து முடிந்திருந்தது. கண்ணன் இரண்டு பாடங்களுக்கான பரீட்சைகளையும் நன்றாக எழுதியிருந்தான். மற்றைய பாடங்களைத் தயார் செய்வதில் மூழ்கியிருந்தான்.

திடீரென்று ஒருநாள் ஊரில் கதை பரவலாயிற்று. ஆமி தகரவேலியைக் கழற்றி விட்டானாம். வெளிக்கிடப் போகிறான் என்று பல மாதிரியும் கதைத்தார்கள். கண்ணன் படிப்போடு ஒன்றிப்போயிருந்ததால்அவனுக்கு வெளி நடப்புத்தெரியவில்லை. அருணாசலத்தார் தோட்டத்தோடு பொழுதை ஓட்டிக் கொண்டிருந்தார். அவருக்கும் இந்தச் செய்திகள் ஒன்றும் காதில் விழவில்லை.

அன்று கண்ணனுக்குப் பரீட்சை இருந்தது. அதிகாலை மூன்று மணிக்கே எழும்பிப் படித்துக் கொண்டிருந்தான். இருந்தாற்போல் குண்டுச் சத்தங்கள் கேட்கத்துவங்கின. ஷெல்கள் தலைக்கு மேலாக கூவியவண்ணம் அண்மையில் வந்து விழத் தொடங்கின. பொம்மர் ஒன்று வானில் வட்டமடித்துக் குண்டுகளை வீசித் தள்ளியது. போதாதற்கு ஹெலி ஒன்று வட்டமிட்டபடி 'றொக்கட்' தாக்குதலை மேற்கொண்டது. அருணாசலம் குடும்பத்தினருக்கு அப்போதுதான் நிலைமை விளங்கியது. பீதியடைந்து எல்லோரும் அவசரமாக வெளியேறத் தொடங்கினார்கள். வெடிச் சத்தங்களுக்கு மத்தியில் அவர்கள்போய்க்கொண்டிருந்தனர். எங்கும் சனவெள்ளம். அதற்குள் துப்பாக்கிச் சன்னங்களும் காற்றை ஊடறுத்து வந்தபடி இருந்தன. அருணாசலத்தாரும், மற்றவர்களும் முன்னே போய்க்கொண்டிருக்க, கண்ண

காணவில்லை. சனக்கூட்டத்தில், வேறு எங்கெல்லாமோ அவனைத் தேடினர். இன்று வரை தேடுகின்றனர்.

பலரும் பலமாதிரியும் கதைத்தனர். சிலரை ஆமிபிடித்து விட்டதாக ஒரு கதை. 'சிலரைச் சுட்டுப்போட்டாங்களாம்' என்றும் இன்னொரு கதை சிலர் பொம்மர் அடித்தும், சிலர் ஷெல் பட்டும் இறந்துவிட்டதாகக் கதைத்தார்கள். எதிலுமே கண்ணனைப் பற்றியதகவல்கிடைக்கவில்லை

அருணாசலத்தாரும் அலையாத இடமில்லை. எதிலும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை.

★ ★

ஒருநாள் அருணாசலத்தார் அவசரமாக ஓடிவந்தார். 'இஞ்சாரும் செல்லம்! உங்க ஆமியிட்டைப் பிடிபட்ட ஆக்களில கொஞ்சப் பேரை விட்டிருக்கிறாங்களாம். எங்கடை வீரசிங்கமும் பிடிபட்டு இருந்து விடுபட்டிருக்கிறானாம். அவன் இப்ப இணுவிலிலை இருக்கிறானாம். நான் ஒருக்கால் போய் விசாரிச்சுக் கொண்டு வரப்போறன்'' சொல்லியவர் உடனே புறப்பட்டும்விட்டார்.

இப்போதுதான் ஓரளவு சுயநிலைக்கு வந்திருந்த செல்லம்மாவிற்கு, மீண்டும் பழைய நினைவுகளும், கவலையும் தலைகாட்டத் துவங்கியது. இடையிடையே மூத்தமகனின் நினைவு வந்து அலைக்கழித்தாலும், சிறிது தென்பாய் இருந்து மற்றப்பிள்ளைகளைக் கவனித்து வந்தவளுக்கு இந்தச் சேதியைக் கேட்டதும் மகன் சுகமே இருப்பதாகச் செய்தி கிட்டாதோ என்ற நப்பாசையும் மனதில் துளிர் விட்டது. அருணாசலத்தாரின் வரவை ஆவலுடன் பார்த்திருந்தாள்.

★ ★

இணுவில் கந்தசுவாமிகோயிலடியில் சிறுவர் கூட்டமாக நின்று பட்டம் விட்டு விளை

சிறிது உயரமாய் வளர்ந்திருந்த ஒரு பையன் மற்றொருவனிடம் ''டேய்! மயில்வாகனத்தாரின்ரை வீட்டை ஒருக்கா இந்த ஐயாவுக்குக் காட்டிவிடடா'' என்று உத்தரவிட்டவன் இவரைப் பார்த்து ''ஐயா! இவனோட போங்கோ வீட்டைக்காட்டி விடுவான். அந்த வீட்டிலதான் நீங்கள் தேடின வீரசிங்கம் எண்டவரும் இருக்கிறார்.'' என்று கூறினான். 'நல்லகுணமான பெடியனாக்கிடக்கு' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டே அந்தச் சிறுவனுடன் போனார் அருணாசலத்தார்.

இவ்வளவு சுலபமாக வீரசிங்கம் இருக்கும் வீட்டைக்கண்டு பிடித்துவிடலாம் என்று அவர் எள்ளவும் எண்ணியிருக்கவில்லை. படலையைத் திறந்தவர் அதிசயித்துப்போனார். ஏதோ கதாப்பிரசங்கம் நடக்கும் இடம்போல் சனக் கூட்டம் அங்கு நிரம்பியிருந்தது. எல்லோரும் புதினங்களைஅறிந்துகொள்ளவந்திருந்தார்கள் அத்தனை பேரின் மத்தியிலும் இவரைக் கண்டவுடன் வீரசிங்கம் எழுந்துவந்து ''பெரியப்பு வாங்கோ'' என்று உபசரித்தான். கண்ணனைப் பற்றி அவனே விசாரிக்கத்தொடங்கி விட்டான். அருணாசலத்தாரும் அவனை விடவில்லை. துருவித் துருவி விசாரித்தார். கண்ணனைக் கண்டதாகத் தகவலே இல்லை. இறுதியில் வீரசிங்கம் தனது அபிப்பிராயத்தைத் தெரிவித்தான்.

''பெரியப்பு ஆமி முன்னேறி வந்த அண்டைக்கு மூண்டு பேரைச் சுட்டுப்போட்டுக் கொளுத்திப்போட்டாங்கள் எண்டு கேள்வி. ஒருவேளை அதிலை ஒண்டாய் இருக்குமோ?''

அருணாசலத்தாருக்கு மண்டைக்குள் எரியுமாப்போல் ஓர் உணர்வு. நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சிறிது நேரம் அப்படியே இருந்து விட்டார். அவர்கள் தந்த கோப்பியைக் குடித்தபின் சிறிது தென்பு வரவே வீட்டிற்குப் புறப்பட்டார்.

பொழுது சாயும் நேரத்தில் களைத்து விழுந்து வந்த அருணாசலத்தார் ஒன்றுமே பேசவில்லை. 'தொப்'பென்று நிலத்தில் இருந்து விட்டார். செல்லம்மா பயத்துடன் நெஞ்சு படபடக்க அவர் என்ன சொல்லப் போகிறாரோ? என்ற அச்சமேலீட்டால் ஓர் ஓரமாக ஒதுங்கி நின்று அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்தால் ''எல்

றாக மாறிவிட்டாள். தனது பிள்ளைகளின் நலன்களைக் கவனிப்பதில் அக்கறை செலுத்தினாள். அவளது வாழ்க்கையில் வறுமை வேறு தலை காட்டத் துவங்கி இருந்தது. கிடைக்கும் நிவாரணப் பொருள்களோடு மட்டும் குடும்பத் தேவைகளைச் சமாளிக்க முடியவில்லை. இடையிடையே, அவளது நகைகள் கடைக்குப் போய் பணமாகி வந்தது. ஒரு மாதிரி காலம் போய்க் கொண்டிருந்தது.

ஒருநாள் காலை அவர்களது வீட்டு வாசலில் வான் ஒன்று உறுமியபடி வந்து நின்றது. வானைக் கண்டதும், அவர்களது நாய் குரைக்கத் தொடங்கியது. குரைத்தபடி வானை நோக்கி ஓடிய நாய், சட்டென்று அடங்கிப் போயிற்று. வாலை ஆட்டிக் கொண்டே அனுங்கி ஆரவாரித்தது. எட்டிப் பார்த்த செல்லம்மா புலிகளின் சீருடையில் சிலர் வானிலிருந்து இறங்குவதைக் கண்டாள். அதற்குள் அவளது இளைய மகள் ''அம்மா! எங்கடை பெரியண்ணைப் புள்ளை எல்லே வந்திருக்கிறார்!'' என்று மகிழ்ச்சியுடன் துள்ளவே, செல்லம்மா தன் மகன் கண்ணனை அடையாளங் கண்டு கொண்டாள்.

''கண்ணா!'' என்று கூவியவள், ஓடோடிப்போய் மகனைக் கட்டிப்பிடித்து கொஞ்சியவாறு ''ஓ''வென அழத் துவங்கி விட்டாள். இந்த ஒரு வருடத்தில் அவர்கள் கண்ணனை இப்படி ஒருநிலையில் காண்போமெனக் கனவு கூடக் காணவில்லை. ஏதேதோ கற்பனைகளைப் பண்ணிக் கலங்கினார்களே தவிர, தங்கள் மகன் இப்படியொரு பாதையைத் தேர்ந்திருப்பான் என்று ஏன் எண்ண முடியாமற் போயிற்று?

(முற்றும்)

## நாட்டைக் காக்கும் நாயகன் சேனை பலமுற வந்துபடைதனில் இணைவீர்

வீட்டை மறந்து விடுதலை விரும்பி
தொட்டு ஆட்டித் தூக்கி வளர்த்த
அன்னை தந்தை உற்றம் சுற்றம்
அனைத்தும் துறந்து அணிஅணி யாக
அந்நிய நாட்டு அரக்கர்க் கெதிராய்
செந்நீர் சிந்தச் செருக்களம் வந்து
எண்பதி னாயிரம் வீரர்கள் முன்னே
எட்டே யாயிரம் வீரர்கள் நின்று
கொட்டும் பனியில் குளிர்விட் டாலும்
கட்டுப் பாடும் கடமையுணர்ச்சியும்
கொண்டே நிற்கும் நம்புலி வீரர்
நோயும் நொடியும் இல்லா உடலை
பாயும் தோட்டா வீழும் குண்டு
படரும் வெடிகள் தொடரும் இடிகள்
வீழ்ந்து உடலை வாட்டிய போதும்
அங்கம் அழிந்து பங்கம் வரினும்
எங்கள் தாயகம் ஈழத் தாயகம்
என்ற இலட்சிய வேகத் தோடு
வேதனை மறந்து வேட்கை கொண்டு
ஏறுமுன் னேறென எதிரியை நோக்கி
வீறுகொண் டெழுந்து வெற்றி முழக்கி
சாவினி லேயும் சரித்திரம் படைத்து
நாட்டைக் காக்கும் நாயகன் சேனை
பலமுற வந்து படைதனில் இணைவீர்
ஆதிபத் தியம்அஸ் தமிக்கும் வரையும்
சாதிம தங்கள் எதுவும் இன்றி
பேதஉ ணர்வுகள் பெரிதும் நீங்கி
போர்முர சறையும் போகிரி களுக்கு
யாரே ஆயினும் எங்கள் பூமியில்
எடுத்தடி வைத்தால் தடுத்தடி கொடுப்போம்
என்ற சொல்லே எங்கும் முழங்குக

ங்கள் பிள்ளையை அடிச்சாங்களோ! நொருக்கினாங்களோ? என்ரை பிள்ளை என்ன பாடு படுகிதோ?'' சொல்லியவளின் கண்கள் நீரைச் சொரிந்தன.

''நானெல்லே உமக்குச் சொன்னனான். சும்மா அழுது கொண்டிராதையும் எண்டு. சும்மா அழுகிறதை விட்டிட்டு கடவுளைக் கும்பிடும். அதுக்கு மேல நாங்கள் என்னத்தைத்தான் செய்யிறது. அது சரி இப்ப பிள்ளையள் பள்ளியால வரப்போகுதுகள். சமைச்சுப் போட்டீரே?''

''இல்லையப்பா! எனக்கெண்டால் சமைக்க மனம் ஏவுதில்லை'' என்று செல்லம்மா கூறவே, அருணாசலத்தாருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது.

''நீர் சும்மா அவனை நினைச்சு அழுது கொண்டிருந்தால், மற்றப் பிள்ளையளை என்ன செய்யிறது? அதுகள் இப்ப பள்ளியாலை வந்து என்னத்தைச் சாப்பிடுறது? அப்பிடியெண்டால் ஒண்டு செய்வமே? பிள்ளையளையும் தூக்கிக் கிணத்துக்கை போட்டிட்டு நாங்களும் குதிப்பம்.''

களில் மூத்தவன் கண்ணன் ஏ. எல். வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். அவனுக்குப் பரீட்சை வேறு நெருங்கி விட்டது. அவனுக்குப் படிக்கப் புத்தகங்களோ, கொப்பிகளோ ஒன்றுமே இல்லை. எல்லாவற்றையுமே தான் மாவிட்டபுரத்திலேயே விட்டுவிட்டு வந்து விட்டார்களே. பாவம்! அவன் செய்வதறியாது யோசித்தான்.

அவனது நண்பனொருவனது வீடு, அளவெட்டியில் இருந்தது. அவனுடனாவது சேர்ந்து படிக்கலாமென்றால் மானிப்பாயில் இருந்து அளவெட்டிக்குப் போய் வருவது மிகவும் சிரமமாக இருந்தது. அருணாசலத்தார் யோசித்தார். ஐந்து பிள்ளைகளுடன் இன்னொருவர் வீட்டில் தங்குவதும் அவருக்கு நல்லதாகப்படவில்லை. எனவே அளவெட்டியில் ஒரு சிறிய வீடு வாடகைக்கு எடுத்து அங்கு குடிபோனார்கள். எப்பொழுதும் சுறுசுறுப்பாக இயங்கும் அருணாசலத்தாருக்குத் தொழில் எதுவுமின்றிச் சும்மாயிருப்பதும் பிடிக்கவில்லை. அவர்கள் குடியிருந்த வீட்டிற்கு அண்மையில் ஒரு தோட்டக்காணியைக் குத்தகைக்கு எடுத்தார்.

படித்துக் கொண்டிருந்தான். இருந்தாற்போல் குண்டுச் சத்தங்கள் கேட்கத்துவங்கின. ஷெல்கள் தலைக்கு மேலாக கூவியவண்ணம் அண்மையில் வந்து விழத் தொடங்கின. பொம்மர் ஒன்று வானில் வட்டமடித்துக் குண்டுகளை வீசித் தள்ளியது. போதாதற்கு ஹெலி ஒன்று வட்டமிட்டபடி 'றொக்கட்' தாக்குதலை மேற்கொண்டது. அருணாசலம் குடும்பத்தினருக்கு அப்போதுதான் நிலைமை விளங்கியது. பீதியடைந்து எல்லோரும் அவசரமாக வெளியேறத் தொடங்கினார்கள். வெடிச்சத்தங்களுக்கு மத்தியில் அவர்கள்போய்க்கொண்டிருந்தனர். எங்கும் சனவெள்ளம். அதற்குள் துப்பாக்கிச் சன்னங்களும் காற்றை ஊடறுத்து வந்தபடி இருந்தன. அருணாசலத்தாரும், மற்றவர்களும் முன்னே போய்க்கொண்டிருக்க, கண்ணனும் அவர்களது நாயும் பின்னால் வந்து கொண்டிருந்தனர்.

எல்லோரும் வந்து சண்டிலிப்பாயில் ஒரு பள்ளிக்கூடத்தில் தரித்தனர். மிகவும் களைத்துச் சோர்ந்து போயிருந்த அவர்கள் அப்போதுதான் கவனித்தார்கள். கண்ணனைக்

இப்போதுதான் ஓரளவு சுய நிலைக்கு வந்திருந்த செல்லம்மாவிற்கு, மீண்டும் பழைய நினைவுகளும், கவலையும் தலைகாட்டத் துவங்கியது. இடையிடையே மூத்தமகனின் நினைவு வந்து அலைக்கழித்தாலும், சிறிது தென்பாய் இருந்து மற்றப்பிள்ளைகளைக் கவனித்து வந்தவளுக்கு இந்தச் சேதியைக் கேட்டதும் மகன் சுகமே இருப்பதாகச் செய்தி கிட்டாதோ என்றநப்பாசையும் மனதில் துளிர் விட்டது. அருணாசலத்தாரின் வரவை ஆவலுடன் பார்த்திருந்தாள்.

★ ★

இணுவில் கந்தசுவாமிகோயிலடியில் சிறுவர் கூட்டமாக நின்று பட்டம் விட்டு விளையாடிக்கொண்டிருந்தனர். அருணாசலத்தார் அவர்களிடம் விசாரித்தார். ''தம்பியவை இங்கினைக்க வீரசிங்கம்எண்டமாவிட்டபுரத்துப் பெடியன் இருக்கிறானாம். ஆமி பிடிச்சு வச்சிருந்து கிட்டடியிலதான் விடுபட்டுவந்தவன். உங்களுக்குத் தெரியுமே அவன் இருக்கிற வீடு?''

அருணாசலத்தாருக்கு மண்டைக்குள் எரியுமாப்போல் ஓர் உணர்வு. நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சிறிது நேரம் அப்படியே இருந்து விட்டார். அவர்கள் தந்த கோப்பியைக் குடித்தபின் சிறிது தென்பு வரவே வீட்டிற்குப் புறப்பட்டார்.

பொழுது சாயும் நேரத்தில் களைத்து விழுந்து வந்த அருணாசலத்தார் ஒன்றுமே பேசவில்லை. 'தொப்'பென்று நிலத்தில் இருந்து விட்டார். செல்லம்மா பயத்துடன் நெஞ்சு படபடக்க அவர் என்ன சொல்லப் போகிறாரோ? என்ற அச்சமேலீட்டால் ஓர் ஓரமாக ஒதுங்கி நின்று அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்தால் ''எல்லாம் வீண். அவன் தம்பியையே அங்கை காண இல்லை எண்டு சொல்லுறானப்பா! ம்!'' என்று ஒரு நீண்ட பெருமூச்சை விட்டார். ''எல்லாம் நாங்கள் செய்த பலன்' அவரது வாய் முணுமுணுத்தது.

★ ★

செல்லம்மா இப்போது முற்

படரும் வெடிகள் தொடரும் இடிகள்
வீழ்ந்து உடலை வாட்டிய போதும்
அங்கம் அழிந்து பங்கம் வரினும்
எங்கள் தாயகம் ஈழத் தாயகம்
என்ற இலட்சிய வேகத் தோடு
வேதனை மறந்து வேட்கை கொண்டு
ஏறுமுன் னேறென எதிரியை நோக்கி
வீறுகொண் டெழுந்து வெற்றி முழக்கி
சாவினி லேயும் சரித்திரம் படைத்து
நாட்டைக் காக்கும் நாயகன் சேனை
பலமுற வந்து படைதனில் இணைவீர்
ஆதிபத் தியம்அஸ் தமிக்கும் வரையும்
சாதிமதங்கள் எதுவும் இன்றி
பேதஉணர்வுகள் பெரிதும் நீங்கி
போர்முரசறையும் போகிரிகளுக்கு
யாரே ஆயினும் எங்கள் பூமியில்
எடுத்தடி வைத்தால் தடுத்தடி கொடுப்போம்
என்ற சொல்லே எங்கும் முழங்குக
நின்று சொல்லும் வதந்திகள் யாவும்
சென்றே ஒழிக சென்றே ஒழிக
நினைவும் செயலும் போரே யாகுக
மற்றவை யாவும் சற்றே மறந்து
மானம் ஒன்றே மனத்தில் வைப்பீர்
மலரும் ஈழம் மகிழ்வாய் வாழ்வீர்.

"இளங்கவி"


வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தக சங்கம் அளிக்கும்

நிதி உதவி

# கலை நிகழ்ச்சிகள்

இடம்: யாழ் இந்துக் கல்லூரி. காலம்: 16. 10. 93. நேரம்: இரவு 6 00 மணி

நிகழ்ச்சிகள்

1 பருத்திநகர் சாண்டோ எம். துரைரெத்தினம் அவர்களினால் நடாத்தப்படும் "வீரதீரச் செயல்கள்" முதல் முறையாக யாழ் நகரில் அரங்கேறவுள்ளது.

(அ) நெருப்பு புதைகுழியில் சில மணிநேரம் படுத்திருத்தல்.
(ஆ) இரண்டு உழவு இயந்திரத்தை எதிர் எதிராக ஒரே நேரத்தில் உடலில் ஏற்றுதல்.
(இ) அதிபாரம் கொண்ட லொறியினை மார்பில் ஏற்றுதல்
(ஈ) ஓடும் வாகனத்தை தொண்டையினால் இழுத்தல்
(உ) 35 கிலோ எடையுள்ள இரும்புக் குண்டினை 7 அடி உயரத்திலிருந்து வயிற்றில் ஏந்துதல்.
(ஊ) பாரம் கொண்ட கல்லை மார்பின் மேல் வைத்து சம்மட்டியால் அடித்து உடைத்தல்.
(எ) இன்னும் பல வீரதீரச் செயல்கள்.

2. மோகன் மாஸ்டர் அவர்களினால் நடாத்தப்படும் கராட்டி விளையாட்டுக்கள்.
3. கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் அவர்களின் பட்டிமன்றம்.
4. கலை பண்பாட்டுக் கழகத்தினால் நடாத்தப்படும் நாடகம்.

அனைத்து தமிழீழ வர்த்தகர்களையும், பொதுமக்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

(சி-7493) வ. யா. ஆ. ம. வ. சங்கம்



# தொழிற் பயிற்சிகள்

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் எலக்ரோனிக் துறையில் தொழில் வாய்ப்பு பெறக்கூடிய முறையில் பயிற்சியளிக்கப்படுகின்றன.

(1) ★ றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்

சகல இன றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் தொழிற்படும் முறைகள், பழுதுகள் திருத்தப்படும் முறைகள் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 6 மாதம்

(2) ★ றீவைண்டிங் டைனமோ, ரான்ஸ்போமர், மோட்டார் றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 5 மாதம்

(3) ★ மோட்ட பைசிக்கிள் மெக்கானிசம்

நீர் இறைக்கும் இயந்திரம், மோட்ட பைசிக்கிள் திருத்தப்படும் முறைகள் விளக்கமாக பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 4 மாதம்

(4) ★ "Special English Class"

ஆரம்பம்: 04. 10. 93 (கிழமை நாட்கள்)
03. 10. 93 சனி, ஞாயிறு

விபரங்களிற்கு:

Jaffna Technical Institute

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(றெயில்வே கடவை அருகாமை - மேல்மாடி)

(சி-7508)


மேற்குலகின்

போல் காட்டிக் கொள்கின்றது அதேசமயம் இன்று நிலவும் இத்தகைய குழப்பங்களுக்கு தெரிந்தோ தெரியாமலோ காரணமாக அமைந்துவிட்ட மேற்குலகின் முன்னாள் செல்லப்பிள்ளையான கொர்பச்சேவ் யெல்ட்சினை வலுவாக கண்டித்து வருகிறார். தனக்கு மீண்டும் காலம் வரும் என்று அவர் காத்துக் கிடக்கிறார்.

எனவே இன்றுள்ளநிலையில் யெல்ட்சின் தனது மத்திய அரசின் கட்டுப்பாட்டினை உறுதிப்படுத்த வேண்டும். பல்வேறாக பிரிந்து நிற்கும் ருஷ்யப் பகுதிகளை தனக்கு ஆதரவாக செயற்பட வைக்க வேண்டும். ஏனெனில் தேர்தல் வரும்போது இப்பகுதிகள் யெல்ட்சினுக்கு ஆதரவாக இல்லாவிட்டால் நிலைமை மோசமாகிவிடும். இராணுவத்தை அடக்கி வைத்திருக்க வேண்டும் தனது எதிர்ப்பாளரை முறியடிக்க வேண்டும். எல்லாவற்றையும் விட நம்பிக்கை இழந்து நிற்கும் மக்களை மீண்டும் ஒரு முறை தனது செயற்பாடுகளில் நம்பிக்கை கொள்ள வைக்க வேண்டும்.

இல்லாவிட்டால் குறைந்தளவு சனநாயக எதிர்ப்புள்ள ஒருவர் பதவியை கைப்பற்ற இதுதான் தருணம் என முடிவு செய்யக்கூடும். அதற்கு விரக்தி நிலையில் இருக்கும் ருஷ்ய மக்கள் ஆதரவு வழங்கக் கூடும்.

# தி. மு. க. தலைவர் கருணாநிதியின் அரசியல் அந்திம காலம் நெருங்குகின்றதா?

“இந்திரா காங்கிரசுடனான கூட்டணியை முறித்துக் கொண்டதோடு பா.ஜ.கவுடன் உறவு ஏற்படக்கூடும் என்ற எண்ணத்தையும், தோற்றுவித்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மிகப் பெரிய அரசியல் தவறு செய்து விட்டார் என்று தோன்றுகின்றது. உடனடியாகத் தேர்தல் வந்தால் அவரது பரம எதிரியான தி. மு. க. கருணாநிதி ‘மாபெரும்’ வெற்றியுடன் பதவிக்கு வருவார் அதுமட்டுமல்ல ஜெயலலிதாவின் தனிப்பட்ட செல்வாக்கும் சரிந்துள்ளது.”

“தனது இரண்டாண்டு கால ஆட்சியின் மூலம், ஜெயலலிதா தனது நற்பெயரை எல்லாம் போக்கடித்துக் கொண்டு விட்டார். கருணாநிதியைத் தான் மக்கள் ஆதரிக்கின்றார்கள். ஜெயலலிதாவின் ஆதரவாளர்களில் கூட கால்வாசிப்பேர் கருணாநிதியையே சிறந்த முதல்வர் என்று கருதுகின்றார்கள். தி. மு. க தேர்தலில் படுதோல்வி அடைந்து இரண்டு ஆண்டுகள்ஆவதற்குள்கருணாநிதியின் சூரியன் உதயமாகியிருக்கின்றது.”

இந்திரா காங்கிரஸ்- அ.தி.மு கா கூட்டணி முறிவடைந்ததைத் தொடர்ந்து, கடந்த மார்ச் மாத இறுதியில் ‘இந்தியா ருடே’ நடத்திய கருத்துக் கணிப்பின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் இவை. இக் கருத்துக் கணிப்பை மார்க்கெட்ரிசர்ச் துறையில் முன்னணியில் இருக்கும் ‘மார்க்’ என்ற நிறுவனம் நடத்தியது. ‘மார்க்’ நிறுவனம் இது போன்ற கருத்துக் கணிப்புக்களையும், தேர்தல்கால கருத்துக் கணிப்புக்கள் பல வற்றையும் இதற்கு முன்னர் நடத்திய அனுபவமுள்ளது. இக் கருத்துக் கணிப்புக்களில் பெரும்பாலானவை மிகவும் துல்லியமாக அமைந்திருந்ததை பின்னைய தேர்தல் முடிவுகள் காட்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஆறு மாதத்திற்கு முற்பட்ட ‘மார்க்’ நிறுவனத்தின் கருத்துக் கணிப்பு இவ்வாறாக இருக்க, இக் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டு சுமார் ஆறு மாதங்களுக்குப் பின்னர் இடம்பெற்ற இரு இடைத் தேர்தல்கள் தமிழகத்தில் ஜெயலலிதாவின் செல்வாக்கு இன்றும் வீழ்ச்சி கண்டு விடவில்லை என்பதை உணர்த்துமாப் போல்உள்ளது. கடந்தவாரம் ராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்கும், பழனி நாடாளுமன்றத் தொகுதிக்கும் நடைபெற்ற தேர்தலில் அ.தி.மு.க. அமோக வெற்றி ஈட்டியமை இதனை வெளிக்காட்டியுள்ளது.

1991 இல் இடம்பெற்ற பொதுத் தேர்தலின் பின் அரசியற் கட்சிகளின் கூட்டணி மாற்றம் அரசியற் சூழ்நிலை மாற்றங்களின் பின் மிகவும் இழுபறி நிலையில் இடம்பெற்றராணிப்பேட்டை சட்டமன்ற மற்றும் பழநி பாராளுமன்ற தொகுதிக்கான இடைத்தேர்தல் தமிழகத்தில் அ. தி. மு. க, தி. மு. க, காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் பலப் பரீட்சை களகமாகவே அமைந்தது. இத்தொகுதிகளில் வெற்றியீட்டுவதென்பது எதிர்கால அரசியலுக்குக் கட்டியம் கூறும் ஒன்றாகவும் அமைந்திருந்தது.

இந் நிலையில் இத் தேர்தலுக்கு கட்சிகள் யாவும் முக்கியம் கொடுத்திருந்தபோது அரசியல் வட்டாரங்களிலும் தேர்தல் முடிவு ஆவலோடு எதிர்பார்க்கப்பட்டும் வந்தது. இதேவேளை இத் தேர்தலில் அ. தி. மு. கவை தோற்கடிக்க எதிர்க்கட்சிகள் முனைப்பாகச் செயற்பட்டன. குறிப்பாக தி. மு. க. தலைமை இத்தேர்தல் வெற்றியில் பெரிதும் நம்பிக்கை கொண்டிருந்ததோடு முக்கியமான இரு பிரமுகர்களையும் தேர்தலில்நிறுத்தியிருந்தது ராணிப்பேட்டைத் தொகுதியில் தி. மு. கவின் முன்னாள் அமைச்சரும் மூத்தஉறுப்பினர்களில் ஒருவருமான ஆற்காடு வீரசாமியையும், பழநியில் செல்வாக்கு மிக்கவரும் முன்னாள் எம். பியுமான சுப்புலட்லமி ஜெகதீசனையும் நிறுத்தியிருந்தது.

இருப்பினும், தி. மு. க. தேர்தலில் கண்ட தோல்வியானது அக்கட்சியின் தலைவரான கருணாநிதிக்கு கிடைத்த பெரும்பலத்தஅடி என்றே கொள்ளலாம். ஆனால் இத் தோல்வியைக் கொண்டுமார்க் ஆறுமாதத்தின் முன் செய்த கருத்துக்கணிப்பு தவறானது என்றுகூறிவிட முடியாது ஆறு மாத காலத்திற்குள் தி. மு.க பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது என்பதே உண்மையாகும்.

இந்திரா காங்கிரசுடன் இவ்வருடம் அ. தி. மு. க உறவை முறித்துக் கொண்டபோது அது ஜெயலலிதா செய்த மிகப் பெரும் தவறாகவே கருதப்பட்டது. பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுக்களினாலும், அரசியலில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தமை காரணமாகவும் ஜெயலலிதாவின் அரசியல் எதிர்காலம் கேள்விக்குரிய தொன்றாக மாறியிருந்தது.

இ.காங்கிரசுடன்உறவைமுறித்துக் கொண்டமைகாரணமாக எதிர்க்கட்சியான தி.மு.க.முன்வைத்த ஊழல் குற்றச் சாட்டுகள், ஜனதா கட்சித் தலைவரும், தமிழக நல்லாட்சி இயக்கத் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி சுமத்திய நிலபேர ஊழல் குற்றச்சாட்டுக்கள் மற்றும் ஜெயலலிதா எம். எல். ஏ. பதவி பறிப்பு மனு போன்றவையும், காங்கிரஸ் கட்சியுடனான உறவு முறிந்த பின்னர் தமிழக காங்கிரஸ்கட்சித் தலைவர்கள் முன் வைத்த விடுதலைப்புலிகளுடனான ஜெயலலிதாவின் உறவு பற்றிய குற்றச்சாட்டுகளும் ஜெயலலிதா அரசு எப்பொழுதும் கவிழ்க்கப்படலாம் என்ற நிலையே ஏற்படுத்தியிருந்தது. மேலும் ஜெயலலிதாவுடன் நெருக்கமாகிவிட்ட ஆளுநர் பீஷ்மன் நாராயணசிங்கின் இராஜினாமாவும் அரசியலில் தலையை நுழைத்துக்கொள்ள விரும்பும் சென்னாரெட்டியின் ஆளுநர் நியமனமும் இதனை வழியுறுத்துமாப் போலவே இருந்தன.

இந்நிலையில் ஜெயலலிதாவும் சில கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டார். அமைச்சரவை மாற்றம் ஒன்றைச் செய்தார். அதில் நம்பிக்கைக்குரியவர்களாய் இருந்த மூன்று அமைச்சர்களை வெளியேற்றினார். இவர்கள்காங்கிரசுடன் நட்பு பேண முற்பட்டதே காரணம என அறிய முடிந்தது அதேவேளை தனது விசுவாசிகளை புதிய அமைச்சர்களாக நியமித்ததோடு அமைச்சரவையையும் விரிவுபடுத்தினார். இதில் முன்னர் அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்ட வீரப்பனுக்கும்

— ஜெயராஜ் —

அமைச்சர் பதவி வழங்கப்பட்டமை புறநடையாக இருந்தது. இருப்பினும் வீரப்பன் ஜெயலலிதாவை முன்னர் தீவிரமாக விமர்சித்தவரானாலும் அவர் கட்சியில் இருந்து வெளியேற முடிவு செய்துள்ளார். என கிடைத்த தகவல்களைத் தொடர்ந்தே அவருக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டது.

இவ் அமைச்சரவை மாற்றம் அ.தி,மு.க கவின் செல்வாக்கை எந்தளவு மக்கள் மத்தியில் அதிகரிக்க உதவியது என்பது கேள்வியே. ஆனால் காவேரி நீர் பிரச்சினை தொடர்பாக காலவரையற்ற உண்ணாவிரதம் என ஜெயலலிதா எடுத்த முடிவும், அவர் மேற்கொண்ட உண்ணாவிரதமும் அவரது செல்வாக்கை மீண்டும் ஓரளவு மக்கள் மத்தியில் நிலைநிறுத்தியது என்றேகூறலாம். ஜெயலலிதாவின் ‘அரசியல் ஸ்ரண்ட்’ என வர்ணிக்கப்பட்ட இவ் உண்ணாவிரதப் போராட்டம் எது எவ்வாறு ஆயினும் அவரது சரிந்த புகழை சிறிதளவேனும் தாங்கிப் பிடிக்கஉதவியது என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் இதுமட்டும் ஜெயலலிதாவின் தேர்தல் வெற்றிக்குக் காரணம் என்று கூறிவிட முடியாது. இவை யாவற்றிற்கும் மேலாக எதிர்க்கட்சிகளினது குறிப்பாக காங்கிரஸ் கட்சியின் பலவீனமான நிலையும் தி.மு.க. விற்குள் காணப்பட்ட கட்சிப்பூசலே ஜெயலலிதாவின் வெற்றிக்குக் காரணம் என்பதில் அபிப்பிராயப் பேதங்கொள்ள ஏதுமில்லை என்றே கூறலாம்.

கடந்த ஏப்ரல் மாதத்தின் ஆரம்பத்தில் கோவையில் நடந்த மதுரை மகாநாட்டில் “வாரிசுகளை நியமிப்பதற்கு கழகம் சங்கரர் மடமல்ல. வேளை வரும்போது எனக்கு அடுத்தது யார் என்றுதேர்வு செய்துகொள்ளும் அளவிற்குக் கழகம் ஜனநாயக வலுவுள்ளது தான்” என தி.மு.க. தலைவர் கருணாநிதி குறிப்பிட்டு உட் கட்சி மோதலுக்கு ஒரு முடிவு கொண்டுவர முற்பட்டாராயினும் ஓரிரு மாதங்களுள் இப்பூசல் தடுத்து வைக்க முடியாததாக வெளிக்கிளம்பியது.

தி.மு.க. விற்குள் எழுந்த கட்சிப்பூசலானதுஅதன் தலைவர் கருணாநிதியின் இரு மனைவிமார்களுடனும் அதன் பிள்ளைகளுடனும் தொடங்கி தி மு.கவின் முக்கிய தலைவர்களில் ஒருவரான வை. கோபாலசாமிவரையும் நீண்டு செல்கின்றது. கருணாநிதியின் மூத்த மனைவியான தயாளு அம்மாவும் அவரின் இருபுதல்வர்களான ஸ்ராலின் அழகிரிசாமியும் மற்றும் மருமகன் முரசொலி மாறனும் ஒரு அணியில் நிற்க இரண்டாவது மனைவியான ராசாத்தி அம்மாளும் அவர் மகள் கனிமொழியும், கருணாநிதியின் சொத்துரிமைக்கு போட்டியிடுவதுபோல் அவரது அரசியல் வாரிசு ஆவதற்கும் முற்பட்டுள்ளனர்.

இதில், தி.மு.கவின் இளைஞர் அணித்தலைவரான ஸ்ராலினின் பக்கம் தலைவர் கருணாநிதியின் கடைக்கண் பார்வை இருப்பதாகவே படுகின்றது ஸ்ராலினை அடுத்த கட்சித் தலைவராக்கும் பணியில் கருணாநிதி ஈடுபடுவதாக கட்சி வட்டாரங்களில் பலமாகப் பேசப்படுகின்றது. இதனால் பல மூத்த தலைவர்களே முணுமுணுப்பதாகவும் ளும் தொடர்புடைய வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இந் நிலையில் தான் ஸ்ராலினுக்கு போட்டியாளராகவும் தென் மாவட்டங்களில் குறிப்பிடத்தக்க செல்வாக்குப் பெற்றவராகக் கருதப்படும் வை. கோபாலசாமியையும், அவருடன் சார்புடையவர்களையும் ராசத்தி அமாளும் கனிமொழியும் ஆதரிக்கும் நிலை உள்ளது இதன் மூலம் கனிமொழி தனது அரசியல் பாகத்தைப் பெற்றுக் கொள்ளப் பார்க்கிறார்.

இதன் அடிப்படையில் தான் கோவை மாநாடு முடிந்து இரண்டு மாதங்களுக்குள்ளேயே மீண்டும் உட்கட்சிப் பூசல் பூதாகரமாக எழுந்தது ‘கருவின் குற்றம்’ என நாஞ்சில் மனோகரன் எழுதிய கவிதை ஒன்று அவரை கட்சியில் இருந்து கருணாநிதி வெளியேற்றும் அளவிற்குச் சென்றது. பின்னர் அவர் எவ்வளோ முயற்சித்தும் கருணாநிதி கட்சியில் சேர்த்துக் கொள்ளவில்லை.

இதேவேளை நாஞ்சில் மனோகரனை கட்சியில் இருந்து வெளியேற்றியதை மதுரையில் நடந்த கூட்டத்தில் பேசிய வை. கோபாலசாமி கண்டித்தார். நாஞ்சில் மனோகரனை நீக்கியது அவசரத்தில் எடுத்த முடிவு என்றார். அவரை மீண்டும் சேர்த்துக் கொள்வது பற்றி தலைமை மறுபரிசீலனை செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

ஆனால் முரண்பாடுகள் தீவிரமடைந்ததே ஒழிய குறையவில்லை. மதுரையில் நடந்த வேறொரு கூட்டத்தில் பேசிய கருணாநிதியின் மகன் அழகிரிசாமி தனது தகப்பனாரை எதிர்த்துக் கிளர்ச்சி செய்பவர்களை தெரு நாய்கள் என்று பேசினார். ஆனால் அழகிரிசாமியின் பேச்சிற்கு கட்சித் தலைமை மன்னிப்பு கோரிக்கடிதம் பெற்றுக் கொண்டாலும் நாஞ்சில் மனோகரனை கட்சியில் சேர்துக்கொள்ளாமை கட்சியினுக்கு தலைமை ஸ்ராலி ஆதரவாக உள்ளதை வெளிப்படுத்தி நிற்கின்றது.

இந்நிலையில் மார்ச் மாதத்தின் இறுதியில் ‘மார்க்’ நிறுவனம்மேற்கொண்ட கருத்துக் கணிப்பானது, ஆறுமாதங்களின் பின் தலைகீழாக மாறியதில் ஆச்சரியம் எதுவுமில்லைத்தான்.

ஆனால் இவ் இடைத்தேர்தல் தி.மு.க விற்கு நல்லபடிப்பினை. இவ் அனுபவத்தின் அடிப்படையில் தி மு க இனி ஒரு தேர்தலை எதிர் கொள்ள வேண்டுமானால் அது தனது உட்கட்சிப் பூசல்களைத் தீர்த்துக்கொள்ளவேண்டும் ஆனால் தனது வாரிசைக் கட்சியின் வாரிசாக உருவாக்க முற்படும் முதுமைபெற்றுவிட்ட கருணாநிதியின் தலைமையால் அது முடியுமா என்பதே இங்குள்ள கேள்வி. அவ்வாறு இல்லாது விட்டால் எதிரி ஆனாலும் தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி கூறியிருப்பதுபோல் “தி.மு.கவின் பிளவு தவிர்க்க முடியாதது. எம்.ஜீ .ஆர் வெளியேறி அ. தி மு. கவை ஆரம்பித்த நேரத்தில் ஏற்பட்டபாதிப்பை விட அதிகம் இருக்கலாம் கருணாநிதி தன் அரசியல் வாழ்வின் அந்திம காலத்தை நெருங்குகிறார்” என்பது ஒரு சரியான அரசியல் எதிர்வு கூறலாக அமைந்துவிடும்.

# இளைஞர்கள் இல்லாத கிராமம்: சிறிலங்கா இராணுவம் விளைவித்த கொடூரம்

அவர்களிலும் ஒருவர் தான் பாய்ந்து பாய்ந்து சுட்டுக்கொண்டு இருந்தார். முதலாவது ஆளைச் சுட்ட போது சடலம் இரண்டாவது ஆளின் மேல் சரிந்தது. இரண்டாவது ஆளைச் சுடும் போது நானும் இறந்து விட்டதாக நினைத்

நடத்திய அனுபவமுள்ளது. இக் கருத்துக் கணிப்புக்களில் பெரும்பாலானவை மிகவும் துல்லியமாக அமைந்திருந்ததை பின்னைய தேர்தல் முடிவுகள் காட்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஆறு மாதத்திற்கு முற்பட்ட 'மார்க்' நிறுவனத்தின் கருத்துக் கணிப்பு இவ்வாறாக இருக்க, இக் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டு சுமார் ஆறு மாதங்களுக்குப் பின்னர் இடம்

...எதிர்க்கட்சிகள் முனைப்பாகச் செயற்பட்டன. குறிப்பாக தி.மு.க. தலைமை இத்தேர்தல் வெற்றியில் பெரிதும் நம்பிக்கை கொண்டிருந்ததோடு முக்கியமான இரு பிரமுகர்களையும் தேர்தலில்நிறுத்தியிருந்தது ராணிப்பேட்டைத் தொகுதியில் தி.மு.கவின் முன்னாள் அமைச்சரும் மூத்தஉறுப்பினர்களில் ஒருவருமான ஆற்காடு வீரசாமியையும், பழநியில் செல்வாக்கு மிக்கவரும்

...கள் மற்றும் ஜெயலலிதா எம்.எல். ஏ. பதவி பறிப்புமனு போன்றவையும், காங்கிரஸ் கட்சியுடனான உறவு முறிந்த பின்னர் தமிழக காங்கிரஸ்கட்சித் தலைவர்கள் முன் வைத்த விடுதலைப்புலிகளுடனான ஜெயலலிதாவின் உறவு பற்றிய குற்றச்சாட்டுகளும் ஜெயலலிதா அரசு எப்பொழுதும் கவிழ்க்கப்படலாம் என்ற நிலையே ஏற்படுத்தியிருந்தது. மேலும் ஜெயலலிதாவுடன் நெருக்கமாகிவிட்ட ஆளுநர்

...ச்சர் பதவி வழங்கப்பட்டது.

இவ் அமைச்சரவை மாற்றம் அ.தி.மு.க கவின் செல்வாக்கை எந்தளவு மக்கள் மத்தியில் அதிகரிக்க உதவியது என்பது கேள்வியே. ஆனால் காவேரி நீர் பிரச்சினை தொடர்பாக காலவரையற்ற உண்ணாவிரதம் என ஜெயலலிதா எடுத்த முடிவும், அவர் மேற்கொண்ட உண்ணாவிரதமும் அவரது செல்வாக்கை மீண்டும் ஓரளவு மக்கள் மத்தியில் நிலைநிறுத்தியது என்றே கூற

தி.மு.க. விற்குள் எழுந்த கட்சிப்பூசலானது அதன் தலைவர் கருணாநிதியின் இரு மனைவிமார்களுடனும் அதன் பிள்ளைளுடனும் தொடங்கி தி.மு.கவின் முக்கிய தலைவர்களில் ஒருவரான வை. கோபாலசாமிவரையும் நீண்டு செல்கின்றது. கருணாநிதியின் மூத்த மனைவியான தயாளு அம்மாவும் அவரின் இருபுதல்வர்களான ஸ்ராலின் அழகிரிசாமியும் மற்றும் மருமகன் முரசொலி மாறனும் ஒரு அணி

கோவை மாநாடு முடிந்து இரண்டு மாதங்களுக்குள்ளேயே மீண்டும் உட்கட்சிப் பூசல் பூதாகரமாக எழுந்தது 'கருவின் குற்றம்' என நாஞ்சில் மனோகரன் எழுதிய கவிதை ஒன்று அவரை கட்சியில் இருந்து கருணாநிதி வெளியேற்றும் அளவிற்குச் சென்றது. பின்னர் அவர் எவ்வளவோ முயற்சித்தும் கருணாநிதி கட்சியில் சேர்த்துக் கொள்ளவில்லை.

இதேவேளை நாஞ்சில் மனோகரனை கட்சியில் இருந்து வெளியேற்றியதை மது

...விட்டால் எதிரி ஆனாலும் தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி கூறியிருப்பதுபோல் ''தி.மு.கவின் பிளவு தவிர்க்கமுடியாதது. எம்.ஜீ.ஆர் வெளியேறி அ.தி.மு.கவை ஆரம்பித்த நேரத்தில் ஏற்பட்டபாதிப்பை விட அதிகம் இருக்கலாம் கருணாநிதி தன் அரசியல் வாழ்வின் அந்திம காலத்தை நெருங்குகிறார்'' என்பது ஒரு சரியான அரசியல் எதிர்வு கூறலாக அமைந்துவிடும்.

# இளைஞர்கள் இல்லாத கிராமம்: சிறிலங்கா இராணுவம் விளைவித்த கொடூரம்

''எல்லா ஆண்பிள்ளைகளும் அழிக்கப்பட்ட ஒரு கிராமம் உள்ளது. போவோமா பார்ப்பதற்கு?'' என்றுதோழன் கேட்ட போது ''எங்கே அது?'' என்றுஆச்சரியத்துடன் கேட்டேன். மாத்தளை மாவட்டம் தம்புள்ள தேர்தல் தொகுதி, சிகிரியா பொலிஸ் பகுதியிலுள்ள பலுடாவே அந்தக் கிராமம்.

மூன்று தலைமுறைகளுடன் 25 தொடக்கம் 30 குடும்பங்கள் வாழும் புராதன கிராமம். இன்று இளைஞர்கள் இல்லாத இவ் ஊரில் 70 வயதுடைய கடிகெதர உக்குபண்டாதான் பெரியவர். இவருக்கு ஐந்து பெண்பிள்ளைகள். இவருடைய இரண்டு ஆண் பிள்ளைகளும் இராணுவத்தின் அட்டூழியத்தால் அழிக்கப்பட்டுவிட்டனர்.

''எனது வாழ்க்கையில் எல்லாமாக இருந்தது இரண்டு ஆண்பிள்ளைகள் தான். எமது வீட்டுக்கதவை உடைத்து அவ் இருவரையும் இழுத்துச் சென்றார்கள் அவர்கள் செய்த தீங்குதான் என்ன? காலையிலிருந்து மாலை வரை விவசாயம் செய்வதோடு கூலிவேலையும் செய்யும் அவர்களுக்கு அரசியலுக்குப் போகநேரமேது? பகலில் வேலைசெய்துவிட்டு இரவில் வயலில் காவல் வேலைக்கும் போக எமது குடும்பத்திற்கு இருந்ததே இந்த இரண்டு ஆண் பள்ளைகள் தான். அந்த மாதிரியான இரண்டு பேரையும் கொன்று விறகு போல கிபிஸ்ஸ சந்தியில் போட்டிருந்தார்கள். செய்தவர்களைத் தேடி அவர்களைக் கொன்று தின்றாலும் பரவாயில்லை.''

''பலுடாகுளத்தில் கொஞ்சத் தண்ணீர் தான் கிடைக்கும். இங்கு அரசாங்கத்தால் கிடைத்தது ஐந்தாம் வகுப்பு வரையுள்ள பாடசாலையொன்றுதான். ஐந்தாம் வகுப்புக்கு மேல் இங்கு எவரும் படித்ததில்லை.''

''அவர்கள் இராணுவத்திற்கு மிகவும் ஆதரவாகத்தான் இருந்தார்கள். எத்தனையோ முறை தம்புள்ளைக்குச் சென்று இரத்தம் கொடுத்தார்கள். அப்படியானவர்களின் இரத்தத்தைத்தான் அந்தப் பாவிகள் குடித்துவிட்டார்கள்'' எனஅந்த முதியவர்கூறினார்.

''அவர்களுக்கு நல்லது நடக்கக்கூடாது'' என்று 63 வயதுடைய கமகெதர உக்கு அம்மா தனது மகன் டிங்கிரி பண்டாவை கொன்றவர்களுக்கு சாபமிட்டார். பலுடாவேயில் இருக்கும் எல்லா தாய்மார்களும் அவ்வாறு தான் சாபமிடுகின்றனர் அரசு கொடுத்த நட்ட ஈட்டில் 600ரூபா கொடுத்து தங்கள் மகன்மாரின் படங்களை பெரிய அளவில் செய்து புத்தர் படத்திற்கு அருகில் வைத்துள்ளார்கள்.

''தகப்பன் இல்லாத பிள்ளையை இழுத்துச் சென்றார்கள் அத்துடன் பாடசாலை ஆசிரியரையும் இழுத்துக் கொண்டு போனார்கள். ஒரு ஈ, எறும்புக்குக்கூட துன்பம் செய்யாதவர் என்று சொன்னேன். காலையில் பெல்வேஹேர' முகாமிற்கு வாருங்கள் பிள்ளையை அழைத்துச் செல்லலாம் என்று கூறினார்கள். நான் காலை 4 மணிக்கு எழுந்து சென்று கொண்டிருந்தபோது இடைவழியில் நான் கண்டது விறகுகட்டை போல் அடுக்கியிருந்தபிரேதங்களைத்தான். அவர்களுக்கிடையில் எனது மகனும் இருக்கக் கண்டேன். பிரேதத்தைக் கூட எடுத்துச்செல்ல விடவில்லை. அத்தனைபேரையும் அவ்விடத்திலேயே ரயர்போட்டு எரித்தனர்.''

''இதோ அரசால் வழங்கப்பட்ட மரணச் சான்றிதழ். இதில் தம்புள்ள பொதுபுதைகுழியில் அடக்கம் செய்ததாக இருக்கிறது. இது மீள முடியாத ஒரு பாவச் செயல். இந்த நாட்டில் அரசாங்கம் நடத்தும் மற்றவர்களுக்கும் கிடைக்க இருப்பது குண்டு வெடித்து இறந்துள்ளவர்களுக்கு கிடைத்த கதியே அவர்களுக்கு எங்கள் சாபம் கிடைக்கும்'' என அந்த மூதாட்டி கூறினார்.

வடக்கு கிழக்கு யுத்தத்தில் இராணுவத்தினர் இனத்திற்காக இறந்த தியாகிகள் என சிங்களவர் நினைக்கும்போது பலுடாவே மக்கள் மரண அறிவித்தல்களில் தேடுவதுதங்கள் பிள்ளைகளைக் கொன்ற இராணுவத்தினர்இறந்துள்ளனரா? தமது சாபம் பலித்துள்ளதா? என்பதையே.

கடவுள் தங்களின் வேண்டுதலை செய்து முடித்துள்ளார் என்றும் கூறுகின்றனர். பலுடாவே மக்கள் எல்லோரும் தங்கள் பிள்ளைகளைக் கொன்ற பெல் வே ஹேரே முகாமில் இருந்த கஜபா ரெஜிமென்றின் குழு யாழ்ப்பாணத்தில் குழுவாகவே கொல்லப்பட்டு விட்டதாக கூறுகிறார்கள்.

''எனது கணவனை அவர்கள் கொன்றபின் வந்த பொலிசார் கணவனைக் கொன்ற விபரத்தை ஒருவருக்கும் சொல்ல வேண்டாம், என்றும் அப்படிச் சொன்னால் இராணுவத்தினர் மிகுதிப் பேரையும் கொன்று வீடுகளையும் எரித்து விடுவார்கள் என்று சொன்னார்கள். ஜே. வி.பி. காரர் காட்டிலிருக்கும் போது நாம் காட்டில் வயல் வேலைக்குச் சென்றால் அடிப்பார்கள். கடைசியில் ஆண்கள் எல்லோரையும் இராணுவத்தினரே கொன்றுவிட்டனர். எங்களுக்கு நடந்தது போல் இந்த உலகத்தில் ஒருவருக்கும் நடக்கவில்லை'' என்றார் கணவனை இழந்த 26 வயதுடைய சோமாவதி எனும் பெண்.

இவர்களுக்கு இந்த அநியாயத்தைச் செய்தவர்கள் யார்? அவர்கள் இப்பொழுது எங்கு இருக்கிறார்கள்? 57 வயதுடைய கமகெதர ஜீன்பண்டா இவ்வாறு கூறுகிறார்.

''பெல் வே ஹேரா அரச இராணுவம் தான் இந்த அநியாயம் செய்தது. அவர்கள் எல்லோரும் கஜபா ரெஜிமென்டைச் சேர்ந்தவர்கள். அந்த முகாமில் இருந்து இரண்டு பேர் அத்தனபாலுகஜா அருகில் குண்டு வெடித்ததில் இறந்தனர் இதன் எதிரொலி தான் பாவப்பட்ட 22 ஜீவன்கள் மிருகங்கள் போல் பலியாகக் காரணமாக அமைந்தது.''

''குண்டு வெடித்தவுடன் முதலில் அந்த முகாமிலிருந்த 20 இளைஞர்களை குண்டு வெடித்த இடத்திற்கு கொண்டு சென்று சுட்டுக் கொல்ல கூட்டிச் சென்றார்களாம். ஆனால் அந்த முகாம் பொறுப்பாளர் அவர்களை வேறு தேவைக்கு பயன்படுத்தலாம் என்றும், கிராமத்து இளைஞர்களைப் பிடித்து சுட்டுக்கொல்லவும் கூறினாராம். இந்த விடயத்தை அங்கிருந்து விடுதலையாகி வந்த சிகிரியா இளைஞர் ஒருவர் சொன்னார், எங்களுக்காக உங்கள்மகன்மார் இறந்தார்கள் என்றும் அவர்சொன்னார்.

இவ்வாறு சாட்சி சொல்லும் கமகெதர ஜீன்பண்டா பரம்பரை பரம்பரையாக ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர். தனது சகோதரிகளின் கணவன்மாரை இராணுவத்தினர் கொன்றும் கூட, கிராம மக்களின் வெறுப்பின் மத்தியிலும், அவர் ஐ.தே.க. காரராகவே இருக்கிறார். இது பற்றி அவரிடம் கேட்ட போது ''என்ன செய்வது? பிறக்கும் போது நான் யு. என்.பி. காரன் வேறுயாருக்கு வோட்டுப்போட?'' என்றார்.

இவர்கள் எல்லோரும் ஆண்களைப் பிடித்துச் சென்றதைத்தான் கண்டிருக்கிறார்கள். ஆனால் படுகொலையை நேரில் பார்த்ததுடன், உயிர் தப்பிவந்த அபேரத்ன கூறுவது என்ன? ''1988 ஒக்டோபர் 7ஆம் திகதி இரவு நாங்கள் பிடுங்கிக் கொண்டு வந்த பெரிய வெங்காயத்தை வெட்டிக் கொண்டிருந்தோம். வெளியே பட்டாசு வெடித்ததுபோல் சத்தம் கேட்டது. ஜே.வி.பி. காலம் என்பதால் வெளியே செல்லப்பயந்து அறுவடை செய்திருந்த வெங்காயத்தின் மேல் படுத்துவிட்டேன். ''வீட்டைத்திறவுங்கள் ஆண்கள் இருந்தால் வெளியே வாருங்கள்'' என வெளியேயிருந்து சத்தம் கேட்டது. கதவைத் திறக்கமுன்பு கதவை உடைத்து உள்ளே புகுந்தனர். அண்ணனையும் என்னையும் வெளியே இழுத்துவந்தார்கள். ''ஜே.வி.பி.காரர் இருக்கிறார்களா? பொய் சொன்னால் கொன்று விடுவோம்'' என்றார்கள். எங்கள் சிங்கள இராணுவம் என்றபடியால் நான் பெரிதாக எடுக்கவில்லை. ''ஐயோசாமி இங்கு ஒருவரும் இல்லை'' என்றேன் அண்ணனை வாகனத்துக்குக் கொண்டு சென்றார்கள். மற்றும் சிலரை கொண்டுசென்று 45 நிமிடம் எங்களுக்குத் தொடர்ந்து அடித்தார்கள்.

6பஜ்ரோ வாகனத்தில்வந்த 20 அல்லது 30 இராணுவத்தினர் அங்கு இருந்தனர். நான்கு பேர் எங்களை கை, கால், தடி. துவக்கு என்பவற்றால் அடித்தனர்.

எங்களை ஜீப்பில் ஏற்றி பன்சாலைக்கு கிட்டஉள்ள கிணற்றில் எங்களில் இருவரைத் தள்ளிவிட்டார்கள். கரையிலிருந்த கற்களையும் எம்மேல் உருட்டிவிட்டனர். பின்னர் சுமார் 15 பேரை மேலும் கொண்டுவந்து கிணற்றுக்குள் தள்ளினார்கள். சிறிது நேரத்தில் வெளியே இழுத்து கைகளைக் கட்டி ஜீப்பில் கொண்டு சென்றனர். போகும்வழியில் சடலங்கள் றோட்டுக்குக் குறுக்கே இருந்தன. அவற்றில் ஒன்று எனது அண்ணனுடையது என கண்டுகொண்டேன். ஜீப்கள் அச்சடலங்களுக்கு மேலாக அவற்றை அரைத்துக் கொண்டு சென்றன. கிபிஸ்ஸ சந்தியில் எங்களை ஜீப்பிற்கு வெளியே இழுத்தெடுத்து விட்டு இராணுவத்தில் அல்லது பொலிசில் உங்கள் உறவினர்கள் எவரும் இருக்கின்றார்களா? என கேட்டனர் எங்களுக்கு அவ்வாறு யாரும் இருக்கவில்லை.

மும்மூன்று பேராக வரிசையாக முன்னேவரச் சொல்லி முழங்காலில் இருக்கவிட்டு சுடத் தொடங்கி விட்டனர். யாரும்கதைக்கவில்லை. அனைவரும் மரண பயத்தில்இருந்தோம்நான்கடைசியாகபோன மூவரிலும் கடைசியாகத் தான் போனேன். எங்கள் மூவரையும் வரிசையாக இருக்க வைத்து ஜே.வி.பி. காரர் எங்கே என்று கேட்டனர். எங்களுக்குத் தெரியாது என்றோம். எமக்கு சற்றுத்தள்ளி இராணுவத்தினர் நின்று கொண்டிருந்தனர். எங்களைச் சுடுவதற்காக முன்னால் இருவர் நின்று கொண்டிருத்தனர்.

அவர்களிலும் ஒருவர் தான் பாய்ந்து பாய்ந்து சுட்டுக்கொண்டு இருந்தார். முதலாவது ஆளைச் சுட்ட போது சடலம் இரண்டாவது ஆளின் மேல் சரிந்தது. இரண்டாவது ஆளைச் சுடும் போது நானும் இறந்து விட்டதாக நினைத்தேன். இரண்டு பேருடைய சடலங்களும் என்மேல் சாய்ந்ததால் நான் கீழே விழுந்து விட்டேன். திரும்பவும் மூன்று முறைக்கு மேல் சுட்டுவிட்டு சிறிது சென்று திரும்பவும் வந்து சுட்டார்கள். ஒரு சூடு கூட என்மேல் பிடிக்கவில்லை.

ஜீப்கள் புறப்பட்டதும் மெதுவாக தவழ்ந்து சென்று மரத்தின் பின்னால் சிறிது நேரம் பதுங்கியிருந்தேன். கல்துண்டுகள்பிடித்ததால் ஏற்பட்ட காயம் தான் இருந்தது முகம் முழுதும் இரத்தமாக இருந்தது. அங்கிருந்த காட்டுக்குச் சென்று கைக் கட்டுகளை தேய்த்து அறுத்துக் கொண்டேன்'' என்றார்.

இச்சம்பவத்தில் கணவனை இழந்தவர்கள் 25 பேர். கிராமத்தில் உள்ள 15 வயது தொடக்கம் 40 வயது வரை ஆண்கள் அனைவரும் கொல்லப்பட்டனர். 25 பிள்ளைகள் தாய் தகப்பனை இழந்தனர். இவர்கள் அனைவரும் 10 வயதுக்கு உட்பட்டவர்கள். இக்கிராமத்து ஆசிரியையை மணம் முடித்து சிகிரியா மகா வித்தியாலயத்தில் கல்வி கற்பித்து வந்த ஆசிரியர் ஒருவரும் இங்கு கொல்லப்பட்டார்.

நன்றி: ராவய

## மீனவர் மீது தாக்குதல்

மண்டைதீவுக்கு அப்பால் கடல் பிரதேசத்துள் நேற்று அதிகாலை 4 மணியளவில் திடீரென பிரவேசித்த சிறிலங்கா கடற்படை பீரங்கிப் படகில் இருந்து மீனவர்களை நோக்கி தாக்குதல் நடாத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் தொடுக்கப்பட்டதை அடுத்து மீனவர்கள் தொழிலை இடைநிறுத்தி கரைவந்து சேர்ந்ததால் எதுவித சேதங்களும் நடைபெறாமல் தவிர்க்கப்பட்டது. (21)

யாழ்ப்பாணம்

# அச்சுவேலிப்பகுதி மோதலில் நான்கு போராளிகள் வீரச்சாவு

நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் பலாலி இராணுவ தளத்திலிருந்து அச்சுவேலி தொழிற்பேட்டை பகுதியால் முன்னேற முயன்ற படையினர் மீது புலிகள் கடும் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து படையினர் முகாமிற்கு பின்வாங்கினர்.

இத்தாக்குதலில் படையினருக்கு ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை. மாலை ஆறு மணியளவில் படையினர் பின்வாங்கிச் சென்றுவிட்டனர். இத்தாக்குதலில் விடுதலைப் புலிப் போராளிகள் நால்வர் வீரச்சாவை எய்தினர்.

2-ம் லெப். தமிழ்க்கொடி - சிவபாலன் [பாலசிங்கம் மகேந்திரன் கண்டி. தற்போதைய முகவரி: யோகபுரம், மல்லாவி]


2-ம் லெப். இன்பன் [கிட்ணன் ரவிசந்திரன், கண்டி, தற்போதைய முகவரி: ஒட்டறுத்தகுளம், வவுனியா.]

வீரவேங்கை சதானந்தன்-சதா [சின்னத்தம்பி சந்திரவடிவேல், பருத்தித்துறை. தற்போதைய முகவரி வல்லிபுரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு]

வீரவேங்கை பாணுதேவன் [முத்தையா சிவகுமார் காத்தார் சின்னக்குளம் பூந்தோட்டம், வவுனியா ]

வீரச்சாவடைந்த போராளிகளுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றனர்,

## அச்சுவேலியில் வீரச்சாவு



2-ம் லெப். தமிழ்க்கொடி (சிவபாலன்)



2 ம லெப். இன்பன்



வீரவேங்கை பாணுதேவன்



வீரவேங்கை சுதானந்தன்


### இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ்ப்பாணம்

## கொடி வாரம்-1993

ஐப்பசி 03 தொடக்கம் 09 வரை நடைபெறவிருந்த மேற்படி கொடி வாரம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இது நடாத்தப்படவுள்ள தி தி மிக விரைவில் அறிவிக்கப்படும்.

73, கண்டி வீதி, யாழ்ப்பாணம். — கௌரவ செயலாளர்

(சி 7526)



## மின் வழங்கல்

யாழ் நகரிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு புதிதாக மின்சாரம் வழங்கும் சேவ நடைபெற்று வருகின்றது. மின்சாரம் தேவைப்படுவோர் 15-10-93க்கு முன் எமது காரியாலயத்தில் பதிவு செய்து கொள்ளவும். மேல் அதிக விபரங்களுகது தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:-

**மின் வாரியம்,**
தமிழீழ வானொலித் தொடர்பகம்,
பழைய பஸ் நிலையம்,
யாழ்ப்பாணம். (சி-7525)



## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

முன் அநுபவமுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை அண்மையில் பெற்ற சான்றிதழ்களுடன் 04 10 93 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நேரில் வரவும்.

**ஈழநாதம்,**
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(இ)


## மரண அறிவித்தல்கள்

### அம்பலவாணர் வயித்திலிங்கம்

### புலிகளின்

கிழக்கு பிரச்சினைக்கு இராணுவ தீர்வையே காணவேண்டும் என இவர்கள் இப்போது கூறிவருகின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மகாராஷ்டிராவில் பூகம்பம் ஆறாயிரம் பேர் பலியாகினர்

## நூற்றுக்கணக்கான வீடுகள் தரைமட்டம்

மகாராஷ்டிராவில் நேற்று ஏற்பட்ட பயங்கர பூமி அதிர்ச்சிக்கு ஆறாயிரம்பேர் வரையில் பலியாகி இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

மிகமோசமாக பாதிக்கப்பட்ட கிளாரி கிராமத்தில் மட்டும் 600 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிசார் கூறுகின்றனர்.

இதேவேளை மீட்பு பணி நடவடிக்கைகளில் துணைபுரிவதற்கு உதவியாக இருக்குமாறு இராணுவத்தினர் உசார்ப்படுத்தப்பட்டுள்ளதாக பம்பாயில் இருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பம்பாயிலிருந்து சுமார் 700 கிலோமீற்றர் கிழக்கே லாத்தூர் மாவட்டத்தில் அமைந்துள்ள கிளாரி கிராமம்தான் இந்த பூகம்பத்தால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. கெத்தாரே, சந்தோலி, நரசிம்மம்பூர், சுராட் ஆகிய இடங்களில் நூற்றுக்கணக்கான வீடுகள் தரைமட்டமாகி விட்டதாக பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர்.

நாத்திக், ஆமட்நகர் சத்தாரா, பண்டான்பூர் ஆகிய இடங்களில் இந்த பூகம்பத்திற்கு பலியாகியவர்களின் எண்ணிக்கை 65 என்று முதலில் கிடைத்த தகவல் தெரிவிக்கின்றது.

### ஆதாரம் காட்டி பெறவும்

412022050V என்கின்ற இலக்கமுடைய சுபாக்கினம்

## யாழ். மாவட்டத்தில் புதிய கோட்ட கல்வி அலுவலகம்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பதினான்கு புதிய கோட்டக் கல்வி அலுவலகங்களும் இன்று தொடக்கம் ... வலர்கள் நியமிக்கப் பெற்றுள்ளனர்.

இவர்கள் தமது செயலகங்களிலுள்ள செயற்பாடுகளை

ஓய்வூதிய கொடுப்பனவு

## ஆவணங்கள் வந்த பின்னர் திகதியை நிர்ணயிக்குக

(யாழ்ப்பாணம்)

ஓய்வூதியக் கொடுப்பனவுகளை வழங்கும் வங்கிகள் ஓய்வூதிய வவுச்சர்கள் மற்றும் அதற்கான அறிவுறுத்தல்கள் அனைத்தையும் தமக்கு அனுப்பி வைத்த பின்னரே ஓய்வூதியர்களுக்கு கொடுப்பனவு வழங்கும் கால எல்லையை அறிவிக்கும்படி யாழ். செயலகத்தை கேட்டுள்ளன.

இவ்வாறு அறிவுறுத்தல்கள் கிடைக்க முன்னர் கொடுப்பனவிற்கான திகதி அறிவிக்கப்பட்டு விடுவதனால் ஓய்வூதியர்கள் வங்கிகளுக்கு வந்து வங்கி அலுவலர்களுக்குச் சிரமங்களை ஏற்படுத்துகின்றனர். எனவே எங்களிற்கு அறிவுறுத்தல் வழங்கிய பின் கொடுப்பனவிற்கான திகதியை அறிவித்து ஆவன செய்யுமாறு வங்கி வட்டாரங்கள் யாழ். செயலக வட்டாரங்களைக்கேட்டுக் கொண்டுள்ளன என தெரிவிக்கப்பட்டது. (பா)

## வெளிவந்தது

மாற்றம் காலாண்டு மக்கள் சஞ்சிகையின் ஆடி-புரட்டாதி இதழ் (பாதை: 04) வெளிவந்துவிட்டது. அக்கரைச் சக்தி எழுதிய முரண்பாடுகள், அரசறிவியல் பார்வையில் உயர்குழாம் (பொ. ஜெயக்காந்தன்), மலரன்னையின் ஈரம் சிறுகதை, நல்லூரில் நாங்கள் (நேரடி றிப்போட்) மற்றும் கவிதைகள், கட்டுரைகள், போட்டிகள், துணுக்குகள் கொண்டு வெளிவந்துள்ளது.

## ஓராண்டு நினைவுப் பூக்கள்

2-ம் லெப்டினன்ட்
**மறைச்செல்வன்**
(சண்முகம திருச்செல்வம்)

பிறப்பு 3. 12. 1973 — வீரச்சாவு 1. 10. 1992

தாயக மீட்புப் போரிலே- எங்கள்
தலைவன் அணியிலே புலியானாய்
பாயும் எதிரியை பாடையிலேற்றிடும்
பணியில் சுழலும் புலியானாய் மறைச்செல்வனே
இரக்க மற்ற வெறியனை வீழ்த்தியே
கட்டைக் காட்டிலே மாவீரனானாயே!

மற்றும் அந்நாளில் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களுக்கும் எமது வீர அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.


1. 10. 93 வெள்ளிக்கிழமை இன்று எமது இல்லத்தில் நடைபெறும் அஞ்சலி நிகழ்வுகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகள், நண்பர்கள், உற்றார், உறவினர் அனைவரையும் அழைக்கின்றோம்.

சிறுப்பிட்டி மத்தி,
நீர்வேலி.

இங்ஙனம்
உன்பிரிவால் வருந்தும்
குடும்பத்தினர், உற்றார்
உறவினர் நண்பர்கள்

(சி-7527)

## கண்ணீர் அஞ்சலி



## பாதுகாப்பு உத்தியோகத்தர்
## தேவை

முன் அநுபவமுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை அண்மையில் பெற்ற சான்றிதழ்களுடன் 04 10 93 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நேரில் வரவும்.

**ஈழநாதம்,**
31, மகேந்திரா வீதி,
**யாழ்ப்பாணம்.**

(இ)

## மரண அறிவித்தல்கள்

### அம்பலவாணர் வயித்திலிங்கம்

மாதகல் வில்வளையைச்சேர்ந்தவரும், தற்போது வட்டு. சிவன்கோவிலடியில் வசித்தவருமானஅம்பலவாணர் வயித்திலிங்கம்(30 09-93)இல்காலமானார்இவர்தெய்வானையின் அன்புக்கணவரும், செல்லத்துரை (திருமலை), பாலசிங்கம் (ப.நோ.கூ.சங்கம்பண்டத்தரிப்பு), இராசரத்தினம் (கிளிநொச்சி,) மல்லிகாதேவி, பரமேஸ்வரி, கமலாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், இரத்தினம், சுப்பிரமணியம், குகதாஸ், பூவின்பராணி, அன்னலக்ஷ்மி, விஜயலக்ஷ்மி, ஆகியோரின் அன்பு மாமனாரும், கலைச்செல்வி, மதியழகன், கோமதி, மோகனதாஸ், கிருஸ்ணதாஸ், தயாபரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். ஈமக்கிரியைகள் இன்று (1 10-93) மு. ப. 10-00 மணியளவில் வட்டு. இல்லத்தில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இத்தகவலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வட்டுக்கோட்டை — ப. பாலசிங்கம் (மகன்)

(6201)

### திருமதி
### பிள்ளையம்மா நமசிவாயம்

அல்வாய் வடக்கு குமுதெணியைச் சேர்ந்த திருமதி பிள்ளையம்மா நமசிவாயம் (30 9-93) இல் இறையடி சேர்ந்துள்ளார். அன்னார் சின்னட்டி- நமசிவாயம் அவர்களின் அன்பு மனைவியாரும், ந. கிருஷ்ணானந்தன் [சுவிஸ்], ந. தர்மபாலன் [சுவிஸ்], ந. ஜெயபாலன், திருமதி தங்கமலர் நடராசா, திருமதி வனிதாமலர்-குலவீரசிங்கம், திருமதி லதாமலர் நவரத்தினராசா [சுவிஸ்], ஆகியோரின் அன்புத் தாயாரும், மா.நடராசா, செ.குலவீரசிங்கம் (சுவிஸ்), க. நவரத்தினராசா (சுவிஸ்), திருமதி கி. பவிதேவி, திருமதி த.ரதிமலர், திருமதி ஜெ, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 1-10 93 பி. ப. 1 மணிக்கு நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குமுதெணி
அல்வாய் வடக்கு. — ந. ஜெயபாலன் (மகன்)

[6202]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## நூற்றுக்கணக்கான வீடுகள் தரைமட்டம்

மகாராஷ்டிராவில் நேற்று ஏற்பட்ட பயங்கர பூமி அதிர்ச்சிக்கு ஆறாயிரம்பேர் வரையில் பலியாகி இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

மிகமோசமாக பாதிக்கப்பட்ட கிளாரி கிராமத்தில் மட்டும் 600 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிசார் கூறுகின்றனர்.

இதேவேளை மீட்பு பணி நடவடிக்கைகளில் துணைபுரிவதற்கு உதவியாக இருக்குமாறு இராணுவத்தினர் உசார்ப்படுத்தப்பட்டுள்ளதாக பம்பாயில் இருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பம்பாயிலிருந்து சுமார் 700 கிலோமீற்றர் கிழக்கே லாத்தூர் மாவட்டத்தில் அமைந்துள்ள கிளாரி கிராமம்தான் இந்த பூகம்பத்தால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. கெத்தாரே, சந்தோலி, நரசிம்மம்பூர், கராட் ஆகிய இடங்களில் நூற்றுக்கணக்கான வீடுகள் தரைமட்டமாகி விட்டதாக பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர்.

நாத்திக், ஆமட்நகர் சத்தாரா, பண்டான்பூர் ஆகிய இடங்களில் இந்த பூகம்பத்திற்கு பலியாகியவர்களின் எண்ணிக்கை 65 என்று முதலில் கிடைத்த தகவல் தெரிவிக்கின்றது.

## யாழ். மாவட்டத்தில் புதிய கோட்ட கல்வி அலுவலகம்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பதினான்கு புதிய கோட்டக் கல்வி அலுவலகங்களும் இன்று தொடக்கம் ஆரம்பமாகவுள்ளன. மேற்படி பதினான்கு அலுவலகங்களுக்கும் பொறுப்பாக, இலங்கை கல்வி நிர்வாக சேவை அலுவலர்கள் நியமிக்கப் பெற்றுள்ளனர்.

இவர்கள் தமது செயலகங்களிலுள்ள செயற்பாடுகளை 01. 10. 93இல் இருந்துசெயற்படுத்த வேண்டுமெனக் பிரதேசக் கல்விப்பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

### ஆதாரம் காட்டி பெறவும்

412022050V என்கின்ற இலக்கமுடைய சபாரத்தினம் ஓம் சிவானந்தம் (பருத்தித்துறை) என்பவரதுஅடையாள அட்டை வீதியில் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து பெற்றுக் கொள்ளவும்.

### தென்மராட்சி

(வயது 60) இவரது மகள் சுப்பிரமணியம் றஞ்சினிதேவி (வயது 18) இவர்கள் தையிட்டி, காங்கேசன்துறையில் இருந்து இடம்பெயர்ந்து கைதடி நுணாவிலில் வசித்து வந்தவர்கள் தம்பாப்பிள்ளை வசந்த கோகிலம் (வயது 19), சிவசுப்பிரமணியம் தயாநிதி (வயது 19) இவர் பளையில் இருந்து தற்போது இடம் பெயர்ந்து வந்து இங்கு தங்கியிருந்தவர் எஸ். சிவபாக்கியம் (வயது 42), சாவகச்சேரிப் பகுதியில் செல்வநாயகம், பழனியப்பன் ஜெயக்குமார் (வயது 17) ஆகியோரும் கச்சாய் அம்மன்ஆலயபகுதியில் ஹெலிகொப்டர் மேற்கொண்ட தாக்குதலுக்கு சிவலிங்கம் மாயறஞ்சன் (வயது 22), அழகையா திருவேல் (வயது 24) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர். (சி)

### முதல் நாள்

முகவரி சூறாவத்தை சுன்னாகம்) இவ்விரு போராளிகளுக்கும் விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

வெளிவந்து விட்டது!
மக்கள் சஞ்சிகை — 04
ரூபா: 10/-
(6139)

## வரலாறு படைத்த ..



**வீரவேங்கை கிருட்ணகுமார்**
செல்வராஜா சந்திரகுமார், மாயாங்கணை, வல்வெட்டித்துறை. தற்போதையமுகவரி: பாரதி வீதி, பத்தமேனி, அச்சுவேலி.



**வீரவேங்கை வீரபாண்டியன்**
கந்தசாமி இந்திரகுமார், யாழ்ப்பாணம். தற்போதைய முகவரி: வன்னிவிளாங்குளம், மாங்குளம்.



**வீரவேங்கை முருகவேல்**
பெருமாள் கண்ணன், அம்மன் கோவில்வீதி, உதயநகர், கிளிநொச்சி.



**வீரவேங்கை திருமலர்**
யோகராசா கமலேஸ்வரி, மேற்குகொலனி, தம்பலகாமம், திருக்கோணமலை.


1. 10. 93 வெள்ளிக்கிழமை இன்று எமது இல்லத்தில் நடைபெறும் அஞ்சலி நிகழ்வுகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகள், நண்பர்கள், உற்றார், உறவினர் அனைவரையும் அழைக்கின்றோம்.

சிறுப்பிட்டி மத்தி,
நீர்வேலி.

இங்ஙனம்
உன்பிரிவால் வருந்தும்
குடும்பத்தினர், உற்றார்
உறவினர் நண்பர்கள்

(சி-7527)

## கண்ணீர் அஞ்சலி



### மேஜர் குமரன்
(மணியம சிறீ சிவநாதன்)

(ஆனையிறவு-இயக்கச்சி மோதலில் வீரச்சாவு அடைந்துள்ளார்.)

இவர் வவுனியா வைப்(பம்பைமடுச் சந்தி) பிறப்பிடமாகவும் இல. 861, ஐந்து சந்திக்கருகாமை ஆசாத் வீதியை தற்போதைய முகவரியாகவும் கொண்டவராவார் என்பதை அறியத் தருகின்றோம்.

(இ)

தகவல்:
**சகோதரர்கள்**

## கண்ணீர் அஞ்சலிகள்

29-9-93 அன்று மேற்கொள்ளப்பட்ட எறிகணை வீச்சில் கொல்லப்பட்ட நவக்கிரி அ. மி. த. க. பாடசாலை மாணவிகளான கோணராஜா நிருபா [ஆண்டு 4], கோணராஜா மைதிலி [ஆண்டு 1 ஆகியோருக்கும், இவர்களின் தாயார்] கோ. யோகேஸ்வரி மற்றும் சு. பாலச்சந்திரன், க. அம்புஜன் ஆகியோருக்கும் எமது அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

நவக்கிரி அ. மி. த. க.
பாடசாலை.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்

[6149]

## இதய அஞ்சலி

எமது வகுப்பு மாணவன் த. துஷ்யந்தராசாவின்
அன்புத் தந்தை

### க. தனபாலசிங்கம்
[லிகிதர் - யாழ். மெட்டல்ஸ்]

30-9-93 வியாழக்கிழமை சிவபதமடைந்ததை இட்டு அதிர்ச்சியில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அநுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ். இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

13 A, கணிதப்பிரிவு
மாணவர்கள்.

[6150]